பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

**New Master Institute**
B. M. C Lane, Jaffna.
90 A/L பிரிவு III
WEEKEND CLASSES
9.30 — Zoology
10.30 — Botany
12.30 — Physics
1.30 — Chemistry
2.30 — Zoology
3.30 — Botany
2.30 — Pure & Applied-Maths

# உதயன்

விலை ரூ2/50

**New Master Institute**
B.M.C. Lane, Jaffna.
பிரிவு - I, II 90 A/L
WEEK END CLASSES
7.30 — Chemistry
8.30 — Physics
9.30 — Zoology
10.30 — Botany
11.30 — Chemistry
12.30 — Zoology
1.30 — Botany
9.30 — Pure & Applied Maths

கடர்: 4 சுக்கில வருடம் ஆனி மீ 21 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1409 துல்ஹஜ் பிறை 01 (05 । 07 । 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:- 179

# கிளிநொச்சியில் பாடசாலை மீது ஷெல் தாக்குதல்! ஆசிரியர் பலி!!

## அதிபரும், மாணவர்களும் காயமுற்றனர்

கிளிநொச்சி, ஜூலை 5

கிளிநொச்சிப்பகுதியில் நேற்றுக்காலை 7மணிமுதல் தொடர்ந்து ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றன. ஷெல்களில் ஒன்று பன்னங்கண்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக் கட்டடத்தில் வீழ்ந்து வெடித்தது. அதனால் பாடசாலை ஆசிரியர் ஒருவர் உயிரிழந்தார். அதிபரும் வேறு இரு மாணவர்களும் படுகாயமடைந்தனர். பாடசாலைக் கட்டடமும் சேதமுற்றது.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 8 மணிக்கு இடம்பெற்றது.

வகுப்பறையில் இருந்த ஆசிரியர் சங்கரப்பிள்ளை (வயது 58) அந்த இடத்திலேயே மரணமானார். இவர் எட்டுப் பிள்ளைகளின் தந்தை.

அதிபர் அறையிலிருந்த பாடசாலை அதிபர் திரு. கந்தையா சிவஞானம் படுகாயமடைந்தார். இவர்களைத் தவிர மங்களேஸ்வரி, பெரியண்ணன் சூரியகுமார் என்ற இரு மாணவர்களும் படுகாய

(6ஆம் பக்கம் பார்க்க)

## 15 பேர் கொலை

கொழும்பு, ஜூலை 5

தென்னிலங்கையின் பல பாகங்களிலும் கடந்த 48மணி நேரத்தில் 15 பேர் கொலை செய்யப்பட்டனர்.

பொலீஸ்சார்ஜன்ட் ஒருவர், தபாற் பகுதி பொறுப்பதிகாரி ஒருவர், ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர் ஒருவர், பொதுமக்கள் என்பவர்களும் கொலையுண்டவர்களில் அடங்குவர். (அ-)

# ஓமந்தையிலும் ஷெல் தாக்குதல்! பெண் பலி!! தந்தை-மகள் காயம்!!!

வவுனியா, ஜூலை 5

ஓமந்தைப் பகுதியில் திங்கள் இரவு இடம்பெற்ற ஷெல் தாக்குதலின்போது ஓர் இளம் பெண் மரணமானார். தந்தையும் மகளுமான இருவர் காயமடைந்தனர்.

ஓமந்தை பாலமோட்டை வாரியுடையார் இலுப்பைக் குளத்தைச் சேர்ந்த சின்னையா பரமேஸ்வரி (வயது 19) என்பவரே மரணமானவர் ஆவார்.

ராமையா (வயது 43), முத்துலெட்சுமி (வயது 15) ஆகியோரே காயம் அடைந்த தந்தையும் மகளும் ஆவர்.

இரவு 10 மணி அளவில் ஆரம்பமான இத் தாக்குதலின்போது சில வீடுகள் சேதம் அடைந்தன என்றும்—

பலர் பீதி காரணமாக அயல் கிராமங்களுக்கு குடிபெயர்ந்து சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-164)

## இந்தியப்படை விலகல் விவகாரம்

# ராஜீவுக்கு இரண்டாவது கடிதம் ஜனாதிபதி பிரேமா அனுப்பினார்!

## மாவிட்டபுரத்தில் இளைஞர் சடலம்

காங்கேசன்துறை, ஜூலை 5

மாவிட்டபுரம் அரசடிச் சந்தியில் கடந்த திங்கட்கிழமை பகல் சூட்டுக் காயங்களுடன் இளைஞர் ஒருவரின் சடலம் கிடக்கக் காணப்பட்டது.

உயிரிழந்தவர் எஸ். பரந்தாமன் (17 வயது) என்று அடையாளங் காணப்பட்டது.

## அடகு நகைக்கான வட்டி; சலுகைக் காலம் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 5

அடகுநகைகளை மீளப்பெறுவதற்காக பணம் செலுத்துவோருக்கு வழங்கப்பட்ட குறைந்த வட்டிச் சலுகைக்கான கால எல்லை மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் 30ஆம் திகதி வரை இந்தச் சலுகை நீடிக்கப்பட்டிருந்தது.

எனினும் இந்தச் சலுகையை மேலும் நீடிக்குமாறு வட பிராந்திய மக்கள் வங்கி முகாமையாளர் திரு. கே. சுப்பிரமணியம் மக்கள் வங்கித் தலைமையகத்தைக்கேட்டுக்கொண்டிருந்தார்.

இதனையடுத்து எதிர்வரும் செப்டம்பர் 30ஆம் திகதி வரை இந்தச் சலுகை நீடிக்கப்பட்டிருப்பதாக மக்கள் வங்கி தலைமையகம் தற்போது அறிவித்திருக்கிறது. (உ-10)

# இலங்கையின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை என அறிவிப்பு

புதுடில்லி, ஜூலை 5

இந்தியப் படை விலகல் விவகாரம் தொடர்பாக இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு இலங்கை ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா இரண்டாவது கடிதம் ஒன்றை கடந்த திங்களன்று அனுப்பிவைத்திருக்கிறார்.

அமைதிப்படையை விலக்குவது தொடர்பாக இலங்கையின் நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமும் இல்லை என்பதை இக் கடிதம் மூலம் பிரதமர் காந்திக்கு, திரு பிரேமதாஸா தெரியப்படுத்தியிருப்பதாக புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

அமைதிப்படை விலகல் தொடர்பாக ஜனாதிபதி பிரேமதாஸாவின் முதலாவது கடிதத்திற்கு பிரதமர் ராஜீவ் காந்தி பதில் அனுப்பியிருந்தார்.

அந்தப் பதில்கடிதம் கிடைத்ததையடுத்து தமது இரண்டா

(6ஆம் பக்கம் பார்க்க)

## பொறிவெடிக்கு இளைஞர்பலி வவுனியாவில் சம்பவம்

வவுனியா, ஜூலை 5

வவுனியா மாதர் பணிக்கர் மகிழங்குளத்தில் பொறிவெடியில் சிக்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

இரத்தினசிங்கம் மதியாபரணம் (வயது 27) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இவர் மரம் வெட்டுவதற்காக காட்டுக்குச் சென்ற போதே பொறிவெடியில் சிக்கியதாகக் கூறப்பட்டது. (உ-164)

# அநுராதபுரத்தில் தாக்குதல்! ஆறு பொலீஸார் பலி!!

கொழும்பு, ஜூலை 5

அநுராதபுரம் மாவட்டத்தைச்சேர்ந்த எப்பாவல என்ற இடத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை நடைபெற்ற கண்ணிவெடிச் சம்பவம் ஒன்றில் நான்கு பொலீஸார் மரணமானார்கள். மற்றும் மூன்று பொலீஸார் காயமடைந்தனர்.

இதே வேளை அதே மாவட்டத்தைச் சேர்ந்த கஹட்டகஸ்திலிய என்ற இடத்தில் ரோந்து சென்ற பொலீஸார் மீது தீவிரவாதிகள் மறைந்திருந்து தாக்கினர்.

அந்தத் தாக்குதலில் 2 பொலீஸார் மரணமானார்கள்; 3 பொலீஸார் காயமடைந்தார்கள். (அ-1)

## புளியங்குளத்தில் இடம்பெற்ற தாக்குதல்

வவுனியா, ஜூலை 5

திங்களன்று புளியங்குளத்தில் படையினரின் வீதித் தடை நிலை மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் முறியடிக்கப்பட்டதாக படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த மோதலில் சிலர் உயிரிழந்ததாக வவுனியாவுக்குக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன. எனினும் இதனை உடனடியாக ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

இச்சம்பவத்தின் போது தனியார்வாகனம் ஒன்று சேதமடைந்தது. மாங்குளம் பகுதியில் இருந்து வவுனியா வந்த வாகனங்கள் இப் பகுதியில் தரித்து நின்று பிற்பகல் 2 மணிக்குப் பின்னரே வவுனியாவை வந்தடைந்தன. (உ-164)

# ராஜீவுக்கு மற்றொரு கடிதம்!

கொழும்பு, ஜூலை 5

ஜனாதிபதி பிரேமதாஸ பிரதமர் ராஜீவ்காந்திக்கு மேலும் ஒரு கடிதத்தை அனுப்ப இருப்பதாகத் தெரிய வருகிறது.

விடுதலைப் புலிகளுடனான இலங்கை அரசின் யுத்த நிறுத்தம்பற்றி பிரதமர் காந்தி கோரியுள்ள விளக்கங்களுக்கு பதிலளிப்பதாக இக் கடிதம் அமைகிறது எனவும் தெரிவிக்கப்பட்டது.

இக் கடிதம் தயாரிக்கப்பட்டுவிட்டது. மஹியங்கனையில் இருந்து ஜனாதிபதி கொழும்பு திரும்பிய பின்னர் இக் கடிதம் புதுடில்லிக்கு அனுப்பிவைக்கப்படும் என்று கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

## கருணாநிதி கண்டனம்

புதுடில்லி, ஜூலை 5

இந்திய அமைதிப் படை தற்போது மேற்கொண்டுள்ள இராணுவ நடவடிக்கைகளுக்கு தமிழக முதல்வர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசுடன் இருந்த கருத்து வேறுபாடு களையப்பட்ட பின்னும், இலங்கையில் அமைதிப்படை இராணுவ நடவடிக்கை மேற்கொண்டுள்ளது கண்டிக்கத்தக்கது என்று அவர் சொன்னார். (அ-9)

## நொச்சிமுனை மோதலில் பொதுமக்கள் பலி!

கொழும்பு, ஜூலை 5

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த நொச்சிமுனை என்ற இடத்தில் நேற்று முன்தினம் (திங்கட்கிழமை) நடந்த மோதல் ஒன்றின் எதிரொலியாக பொதுமக்களில் ஆறு பேர் கொல்லப்பட்டனர்.

புளியங்குளத்திற்கு மிகச் சமீபமாக உள்ள நொச்சிமுனை என்ற பிரஸ்தாப இடத்தில் இருதரப்பினர் கடுமையாக மோதிக்கொண்டனர்.

நீண்டநேரம் துப்பாக்கிப் பிரயோகமும், ஷெல்வீச்சுக்களும் இடம்பெற்றன.

இருதரப்பினருக்கும் இடையில நடந்த தாக்குதல், பதில் தாக்குதல் என்பவற்றின் விளைவாக 6 பொதுமக்கள் உயிரிழந்ததாகவும் சுமார் 50 பேர் வரை காயமடைந்ததாகவும் இலங்கைப் பாதுகாப்புப்படை வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்பில் செய்திகள் வெளியாகின.

காயமுற்றவர்களில் மோதலில் ஈடுபட்டவர்களில்சிலரும் அடங்குவர் எனச் சந்தேகிக்கப்பட்டது. (அ-1)

# 300க்கும் அதிகமான மனநோயாளர் ஆஸ்பத்திரிகளிலிருந்து தப்பினர்!

கொழும்பு, ஜூலை 5

அங்கொடை, முல்லேரியா ஆஸ்பத்திரிகளில் தங்கியிருந்த 300க்கும் அதிகமான மனநோயாளர்கள் தாம் நினைத்தவாறு தப்பியோடிவிட்டனர்!

சம்பந்தப்பட்ட ஆஸ்பத்திரிகளில் பணியாற்றும் ஊழியர்கள் எவரும் நேற்றுச் செவ்வாய்க்கிழமை கடமைக்குச் செல்லவில்லை. அதன் எதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் இளைஞரின் சடலம் முகத்துவாரத்தில் மீட்பு!

கொழும்பு, ஜூலை 5

ரகு என்ற 19 வயது இளைஞரின்சடலம் கொழும்பு முகத்துவாரக் கடற்கரையில் கடந்த திங்கட்கிழமை பொலீஸாரால் கண்டெடுக்கப்பட்டது தீவிரவாத இயக்கமொன்றின் உறுப்பினர் இவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

அவரது சடலத்தில் 9 குத்துக்காயங்கள் காணப்பட்டன

# நீர்கொழும்பு ஆற்றில் 14முண்டங்கள்

கொழும்பு, ஜூலை 5

தலை இல்லாத முண்டங்கள் ஆற்றில் மிதக்கின்றன! கடந்த ஞாயிறு, திங்கட்கிழமைகளில் மொத்தம் 14 மனித முண்டங்கள் இவ்வாறு கண்டு பிடிக்கப்பட்டன!!

நீர்கொழும்புப் பகுதியில், கொச்சிக்கடையில், மகா ஓயா என்ற ஆற்றிலேயே தலை இல்லாத முண்டங்கள் மிதந்து வரக் காணப்பட்டன.

இந்தத் தகவல் நீர்கொழும்பில் மட்டுமன்றி, கொழும்பு உட்பட தென்னிலங்கை எங்கும் பெரும் பரபரப்பை ஏற்படுத்திஉள்ளது.

முண்டங்களுக்கு உரியவர்கள் எங்கே கொலைசெய்யப்பட்டார்கள்? எங்கே வைத்து அவை போடப்பட்டன? கொலைகளைச் செய்தவர்கள் யார்? கொலையுண்டவர்கள் எத்தரப்பினர்? என்ற சிக்கலான கேள்விகளுக்குப் பதில் பெறமுடியாமல் மக்கள் திகிலடைந்துள்ளனர். எல்லாம் மர்மமாகவே உள்ளது!

தலைகள் இல்லாததால் சடலங்களை அடையாளம்காண முடியாமலும் உள்ளது.

ஆற்றில மிதந்த 14 முண்

(6ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

05—07—1989
ஆனி — 21 புதன்கிழமை
நக்ஷத்திரம்: பூசம்
சுபநேரம்:
04.27 முதல் 05.57 வரை
ராகுகாலம்:
11.57 முதல் 01.27 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

### முச்சந்தி முரளி



அப்ப விடுதலை எண்டிறது அவையளுக்கு மட்டும் கிடைச்சிட்டுது எண்டு சொல்லுங்கோ......!

## பஸ் சேவை ஸ்தம்பிக்கும்?

வடபகுதியில் போக்குவரத்துச் சபையின் பஸ்சேவைகள் ஸ்தம்பிதம் அடையும் நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வ. பி. போ.சபைக்கு டீசல் பற்றுக்குறை ஏற்பட்டிருப்பதாகவும்—

ஒரு சில நாட்களுக்குப் போதுமான டீசலே சபையிடம் கையிருப்பில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது;

புதிதாக டீசலைப் பெற்றுக்கொள்வதிலும் சிக்கல் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது.

இந்த நிலையில் இன்று வ. பி. போ. சபை அதிகாரிகள். பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகளைச் சந்தித்து டீசல் பெறுவதற்கான மாற்று ஏற்பாடுகள் குறித்து ஆராய விருப்பதாகத் தெரிய வருகிறது; (உ-9)

## இந்தியக்குழு விஜயம் ரத்து

இந்திய வர்த்தகத் தூதுக்குழு ஒன்று அடுத்த வாரம் இலங்கைக்கு மேற்கொள்ள விருந்த விஜயத்தை ரத்துச் செய்தது;

இலங்கை நிலைவரம் விஜயம் செய்ய உகந்ததாக இல்லை என்று இந்திய - இலங்கை - தென் ஆசிய வர்த்தக சம்மேளனம் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [அ-எ]

## அடையாளக் கார்ட் பறித்த நபர் சுடப்பட்டார்!

கொழும்பு, ஜூலை 5

மொனறாகலையில் கிராமவாசிகளிடம் இருந்து தேசிய அடையாளக் கார்ட்டுக்களைப் பறிப்பதில் ஈடுபட்டதாகக் கூறப்படும் ஒரு நபரை படையினர்நேற்றுச் சுட்டுக்கொன்றனர்;

வறக்காப்பொலையில இது போன்ற செயலில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இரண்டு நபர்களை பொலீஸார் கைது செய்தனர்.

பாதிக்கப்பட்ட 42 தேசிய

(6ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

எமது பாவனையில் உள்ள 12.5 கன அடி கெல்வூட் டீப்பிறீசர் விற்பனைக்குண்டு. தொடர்பு: காலை 9-11 மணி Yarl Chinese Restaurant (Pvt - Ltd) முதலாம்குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (1046)

நல்ல இன பம்பாய் வெங்காய நாற்று விற்பனைக்குண்டு. மு. குமாரசாமி, வாழை வளவு, அராலி மேற்கு. (1043)

வண்ணார்பண்ணை நாவலர் வீதியில் ஒருபரப்பு 11 குளிகள் காணி விற்பனைக்குண்டு. இல. 177, (131) நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (1042)

### விற்பனையாகின்றது

ஆண்டு 11 பாடநூலுக்கான ஆங்கிலப் பயிற்சிநூல (புதிய பதிப்பு) New Class work Book for English year 11 (Pupil's Book 5) வெளியீடு: கு. வி. அச்சகம், யாழ்ப்பாணம். (1040)

### தவறிவிட்டது

சின்னத்துரை சுந்தரலிங்கம் ஆகிய நானெனது அடையாள அட்டையை (543594377 V) யாழ். வைத்தியசாலையில் தவறவிட்டுவிட்டேன். கண்டு எடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். (1048)

பொன்னன் உதயகுமார் 613442049 V அடையாள அட்டையும் யா/பல்கலைக்கழக ஊழியர் அடையாள அட்டையும் தவறிவிட்டன கிடைத்தவர்கள் தயவுசெய்து பின்வரும் முகவரிக்கு ஒப்படைக்கவும். பொ. உதயகுமார், விளையாட்டுத்துறை, யாழ்/பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம். (11442)

### புத்தகம்

க. பொ. த. (உ த) பிரயோக கணிதப்பயிற்சி நூல் வெளிவந்துவிட்டது. "நிலையியல் பகுதி 1" ஆகிய இந்நூல் 1990, 1991 ஆம் ஆண்டுப் பரீட்சை மாணவர்களுக்கு உகந்தது. ஆசிரியர்: துரையப்பா, St. John's College Jaffna. யாழ். முன்னணிக்கல்லூரிகளில் சிபார்சு செய்யப்பட்டுள்ளது. (1041)

### வேண்டுகோள்

கொல்லன்கலட்டி மாவை விநாயகர் மங்கள ஏஜன்சியிலும் யாழ்ப்பாணம் 52/14, ஸ்ரான்லி வீதி கிளையிலும் விவாகம் நிறைவேற்ற விண்ணப்பித்தவர்கள், யூன் மாதம் முடியும் வரை வேறு வகையில் நிறைவேற்றியவர்கள் எம்மிடம் கொடுத்த முற்பணத்தை பெற விண்ணப்பிக்கவும் யூலை மாதம் முடியுமுன் மீளக் கொடுக்கப்படும். மாவை விநாயகர் மங்கள ஏஜென்சி ஓவசியர்லேன், தெல்லிப்பளை. (1044)

### மணமக்கள் தேவை

எம்மிடம் அநேக மணமக்கள் உண்டு. விரைவில் விவாகம் நிறைவேற்றுவோர் வெளிநாட்டில் வேலை பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் ஸ்பொன்சர் பண்ணி அழைக்கப்படக்கூடிய உயர் தராதரமுள்ள வேளாளர், கோவியர் இன மணமக்களும் வெளிநாட்டில் உள்ள மணமகனை விவாகம் செய்யவிரும்பும் பெண்களும் தேவை. மாவை விநாயகர் மங்கள ஏஜன்சி, ஓவசியர்லேன், தெல்லிப்பளை (1045)

### Nallur Farm Centre

Nallur Farm Centre Prima Lohmann வெள்ளை, சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் Prima Broiler குஞ்சுகள் சிவப்பு சேவற்குஞ்சுகள் Golden Comet Hyline பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய், புதன் கிழமைகளில் பெற்றுக் கொள்ளலாம். C/o நல்லூர் வீடியோசென்ரர், 19 முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி-3006)

### கோழிக்குஞ்சு விநியோகம் Uplands Farm

(Dekalb) பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள் (Cobb) புறொயிலர் குஞ்சுகள் 5ஆம் திகதி புதன்கிழமை (இன்று) விநியோகிக்கப்படும். இல. 9 கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அருகில்) (1047)

---

சட்டவிரோத மின்பாவனை:

# டிரான்ஸ்போமர் பழுதடைந்தால் மின்சாரம் வழங்கப்பட மாட்டாது

## உதவி அரச அதிபர் எச்சரிக்கை

மானிப்பாய், ஜூலை 5

உடுவில், சுன்னாகம். ஏழாலை போன்ற எனது பிரிவுக்குட்பட்ட சில கிராமங்களில் சட்டவிரோத மின்பாவனை அதிகரித்துக் காணப்படுகிறது. சட்டவிரோதமான மின்பாவனையால் டிரான்ஸ்போமர்கள் பழுதடையலாம். அதற்குப் பின்னர் மின்சாரம் அப்பகுதிக்கு வழங்கப்பட மாட்டாது.

இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம்.

சட்ட விரோத மின்சார பாவனை சமுதாயம் முழுவதையும் பாதிப்படையச் செய்யும் என்பதை அவர்கள் உணர வேண்டும்.

மின்சாரம் போன்றவற்றால் பிரதேச சபைகளுக்கு செலுத்தப்படும் பணம் அப்பிரதேச சபையின் வளர்ச்சிக்காகவே செலவிடப்படுகிறது. அதனை மத்திய அரசுக்கு செலுத்துவதாக கருதக்கூடாது.

மின்சாரவரி, சோலைவரி போன்றவற்றை நாட்டின் இன்றைய சூழ்நிலையை சாட்டாக வைத்து செலுத்தத் தவறி விடுகின்றனர்.

நிலுவை வரிகளை மக்கள் ஒழுங்காக பிரதேச சபைகளுக்கு செலுத்துவதுடன், சட்டவிரோத மின்சாரபாவனையை நீக்குவதற்கும் பிரதேச சபைகளுக்கு மக்கள் ஒத்துழைப்புத்தர வேண்டும்.

இவ்வாறு திரு. ஆ. மகாலிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார். (க-90)

## வைத்தியசாலை இல்லை

வடமராட்சி, ஜூலை 5

வடமராட்சிகிழக்கில் உள்ள ஆழியவளை - உடுத்துறை போன்ற இடங்களில் கிராமிய வைத்தியசாலை ஒன்று இல்லாதிருப்பதால் மக்கள் அவதிப்படுகின்றார்கள்.

இந்த இடங்களில் பொதுமக்கள் காணியை அன்பளிப்புச் செய்தால் வைத்தியசாலையைத் தம்மால் அமைத்துக் கொடுக்க முடியும் என்று வடமராட்சி - வடமராட்சிகிழக்கு வைத்திய அதிகாரி திரு. க. லலிதகுமார் கூறியுள்ளதாகத் தெரிய வருகின்றது. (க-160)

## விற்பனைக்கு

கொழும்பில் பாதுகாப்புடன் வாழ்வதற்கு
மின்சாரம், தண்ணீர் சேவை
ஆகிய சகல வசதிகளையும் கொண்ட
3½ பேர்ச்சில் அமைந்துள்ள சிறிய வீடொன்று
கிருலப்பனை, கொழும்பு 6இல் விற்பனைக்கு உண்டு.

பாதுகாப்பான சூழலையும் சிநேக பூர்வமான அயலவர்களையும் உடைய இவ் வீட்டுடன் 47 பேர்ச் வெறும் காணியும் உண்டு

**ஹைலெவல் றேட்டில் இருந்தும் பொலிஸ் நிலையத்திலிருந்தும் 100யார்தூரம்**

விரும்புவோர்

**தபால் பெட்டி 12,**
**நுகேகொட**

என்ற விலாசத்துக்கு மனுச் செய்யவும்.

உ

## திருமண அழைப்பிதழ்

மணமகன்
**செல்வன் பொன்னம்பலம் சிற்றம்பலம்**
★
மணமகள்
**செல்வி நாகலிங்கம் குணமணி**

காலம்:- 06 - 07 - 89 வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிமுதல் 12.00 மணிவரை
இடம்:- "குமரபவனம்" வேலணை மேற்கு, வேலணை - 8.

இங்ஙனம்
தங்கள் நலவரவை நாடும்:

திருமதி இ. பொன்னம்பலம்
புளியங்கூடல்,
ஊர்காவற்றுறை.

திரு. திருமதி நா. மணிவாசகம்பிள்ளை
திருமதி செ. நாகலிங்கம்
சங்கத்தானை,
சாவகச்சேரி.

[1146]

## ★ மகத்தான கடைத் திறப்பு விழா ★

# ★ G. P. ELECTRONICS ★

## G. P. எலக்ரோனிக்ஸ்

5 - 7 - 89 இன்று காலை 10.00 மணி தொடக்கம் 12 மணி வரை உள்ள சுபவேளையில் ஷெ ஸ்தாபனத்தை ஆரம்பிக்க இருப்பதால் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**G. P. எலக்ரோனிக்ஸ் ஸ்தாபனத்தார்.**

- சகல விதமான T. V டெக்
- ரேப்றெக்கோடர் மற்றும்
- மின்சார உபகரணங்கள்
- சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும்.

G. 317, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் அருகாமை) (சு/3020)

---

## கால்நடை வளர்ப்போர் சங்கம்

சாவகச்சேரி ஜூலை 5

தென்மராட்சிப் பகுதி கால்நடை வளப்பவர்களுக்கான கூட்டுறவுச் சங்கம் ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் திரு. எஸ் சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கால்நடை வைத்திய அதிகாரி திருமதி சாம்பசிவம் இதனை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். (ச-31)

# உதவிகளைப் பெற்று அபிவிருத்தி நடவடிக்கை

## அங்குரார்ப்பணக் கூட்டத்தில் உரை

காங்கேசன்துறை, ஜூலை 5

மல்லாகம் பகுதி மக்களுக்கு இதுவரை காலமும் முடிந்த அளவில் பணியாற்றி வந்துள்ளேன். தற்போது வலி-வடக்குப் பகுதி மக்களுக்கும் பணியாற்ற வாய்ப்பு கிட்டியுள்ளது, உள்நாட்டு உதவிகளையும் வெளிநாட்டு உதவிகளையும் பெற்று இப் பகுதியில் பல்வேறு அபிவிருத்தி முயற்சிகளை மேற் கொள்ள நடவடிக்கைகளை மேற் கொள்வேன்.

வலி - வடக்கு பிரதேச ஐக்கிய நாணய சங்கங்களின் சமாச அங்குரார்ப்பணக் கூட்டத்தில் சமாசத்தின் தலைவராக தெரிவு செய்யப்பட்ட மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. சு. ஸ்ரீபாஸ்கரன் மேற்கண்டவாறு கூறினார்.

தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்க மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

ஐக்கிய நாணய சங்கங்களை சிறப்பாக செயல் படுத்தி பல்வேறு நன்மைகளை பெறக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

பல்வேறு பணிகளில் ஐக்கிய நாணய சங்கங்களின் பங்கு அவசியமானதாக விளங்குகின்றது.

ஆகவே இப்பகுதியில் உள்ள ஐக்கிய நாணய சங்கங்களை நாம் சிறப்பாக நிர்வகிக்க வேண்டும்.

வலி - வடக்கில் 29 ஐக்கிய நாணயச் சங்கங்கள் இயங்குகின்றன என்று தெரிய வந்துள்ளது. கிராம ரீதியில் இச் சங்கங்கள் சிறப்பாக இயங்கி கிராம மக்களின் தேவைகளை நிறைவேற்றி வைக்க உதவ வேண்டும்.

இன்று அமைக்கப்பட்ட ஐக்கிய நாணயச் சங்கங்களின் சமாசம் சிறப்பாக இயங்க சகலரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

இப்படி அவர் கூறினார். மற்றும் பலரும் பேசினர். (இ-68)

## அறுதிப் பெரும்பான்மை இல்லை

நெடுந்தீவு, ஜூலை 5

நெடுந்தீவு பல. நோ. கூ. சங்கத் தேர்தலில் புதிய நிர்வாகத்தை அமைக்கக் கூடியதான அறுதிப் பெரும்பான்மை எந்த ஒரு குழுவுக்கும் கிடைக்கவில்லை.

அந்தத் தேர்தலில் மூன்று குழுக்கள் போட்டியிட்டன. கடந்தவாரம் நியமனப்பத்திரங்கள் தாக்கலான போது நெடுந்தீவு மேற்குப்பகுதியில் இரண்டு கிளைகளில் போட்டியின்றி 18 உறுப்பினர்கள் தெரிவாகினர் இதர நான்கு கிளைகளுக்குப் பின்னர் தேர்தல் நடந்தது.

மத்தி கிழக்குப் பகுதியில் போட்டியிட்ட குழு ஒன்று 19 இடங்களைப் பெற்ற போதும் நிர்வாகத்தைத் தனித்து நின்று அமைக்கக் கூடிய வாய்ப்பு குழுவுக்கு இல்லை. (ச - 111)

## மானிப்பாய் லயன்ஸ் கழக புதிய தலைவர்

யாழ்ப்பாணம், ஜூலை 5

மானிப்பாய் லயன்ஸ் கழகத்தின் புதிய தலைவராக திரு. எஸ். கே. நடராசா பதவி ஏற்றுள்ளார்.

யாழ் சைனிஸ் ஹோட்டலில் இடம்பெற்ற விசேஷ வைபவம் ஒன்றிலேயே இவர் பதவி ஏற்றார்.

இவ் வைபவம் சென்ற வருடத் தலைவர் திரு. எஸ். பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராக வலயத் தலைவர் திரு. எஸ். பத்மநாதன் கலந்து கொண்டார். (இ-3)

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், ஜூலை 5

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் மாணிக்கவாசக சுவாமிகளின் குருபூசை 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும்.

திருவாசக முற்றோதல் காலை 8 மணிக்கு ஆரம்பமாகும். (ச)

## கட்டாக்காலி தொல்லை

சுழிபுரம், ஜூலை 5

சுழிபுரம் பகுதியில் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை தினமும் அதிகரித்து வருகிறது.

வயல்களிலும் தோட்டங்களிலும் புகுந்து கால்நடைகள் பயிர்கள் மற்றும் மரங்களை அழித்து வருகின்றன.

பொதுமக்கள் கையொப்பம் வைத்த மகஜர் ஒன்றும் இது தொடர்பாக பயிற்செய்கைக் குழுவினருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (க-28)

---

யாழ். பெரியாஸ்பத்திரிக்கு

# போதிய அளவு பரிசாரகர்கள் விரைவில் நியமிக்கப்படுவர்

யாழ்ப்பாணம் ஜூலை 5

யாழ்ப்பாணம் அரசினர் போதனா வைத்தியசாலையில் ஆண், பெண் பரிசாரகர்கள் இப்பொழுது போதியளவில் இல்லை என அறியவருகின்றது

நோயாளர்களுக்கு ஏற்படும் சிரமங்களை நீக்கும் பொருட்டு ஆண், பெண் பரிசாரர்கள் மிக விரைவில் நியமிக்கப்பட உள்ளனர் என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜீ. சி. ஈ சாதாரண தரப்பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட ஆறுபாடங்களில் சித்தி அடைந்தவர்களே இப் பதவிக்கு தேர்வு செய்யப்பட உள்ளார்கள். (க113)

## ● நன்றி நவிலல் ●

### கமலா லில்லி சோமசுந்தரம் (Mammy)

திருமதி கமலா லில்லி சோமசுந்தரம் 29 - 06 - 89 இல் காலமானார். இறுதி ஆராதனையும் நல்லடக்கமும் 29 - 06 - 89 அன்று மாலை 5 மணிக்கு சாவகச்சேரியில் நடைபெற்றது.

அன்னாரின் நல்லடக்க ஆராதனையில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், மாணவர்களுக்கும் மற்றும் வேறுவிதங்களில் உதவி புரிந்தோருக்கும், அனுதாபம் தெரிவித்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மகன், மருமகள், மகள்,
பேரப்பிள்ளைகள், குடும்பத்தினர்.

தாளையம்பதி வீதி,
நுணுவில் கிழக்கு,
சாவகச்சேரி.

[1147]

## 2 ஆம் ஆண்டுநினைவஞ்சலி



| பொன்னையா கிருஷ்ணபிள்ளை (ஓய்வுபெற்ற விவசாய விரிவாக்க உத்தியோகத்தர்) | கிருஷ்ணபிள்ளை மாணிக்கம் |
| --- | --- |
| மலர்வு: 02 - 08 - 1923 | மலர்வு: 25 - 05 - 1926 |
| உதிர்வு: 05 - 07 - 1987 | உதிர்வு: 05 - 07 - 1987 |


**திதி: 12 - 07 - 1989**

எம்மை அருந்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இவர்கள் பிரிவால் துயருறும்;
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
சகோதரர்கள்.

நெல்லியடி, கரவெட்டி. (1145)

## ஓராண்டு நினைவஞ்சலி



**திருவாளர் வே. கந்தையா**

பிறப்பு: 11 - 02 - 1900
இறப்பு: 16 - 06 - 1988

**திதி 05. 07. 1989**

அன்பின் திருவுருவே! எங்கள் அப்புவே! எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் இதயத்தை விட்டு அகலாது. உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

34/9, கலைமகள் வீதி,
அரியாலை மேற்கு. (11444)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ முதலாவது ★
பிறந்தநாள் வாழ்த்து
★★★★★



★★★★★

**உமாகாந்தராஜா தர்ஷியா**
**05. 07. 1989**

மேற்கு ஜேர்மனியில் வசிக்கும் உமாகாந்தராஜா விஜயராணி தம்பதிகளின் செல்வப் புதல்வி தர்ஷியா இன்று (05. 07. 1989) தனது முதலாவது பிறந்த நாளை மேற்கு ஜேர்மனியில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை டடா, மம்மி, மானிப்பாய் அப்பம்மா குடும்பத்தினர், அராலி அம்மப்பா குடும்பத்தினர், பிரான்ஸ் குட்டி மாமா மற்றும் உறவினர்களும் அம்பாள் அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்

(1126)


நாஷனல்
சிப்பிங் அன்ட் ரவல்ஸ்

பதினெட்டு வயதுக்கு மேற்பட்டோர்

★ ஜேர்மனி ★ இத்தாலி
★ பிரான்ஸ் ★ சுவிஸ்

ஆகிய இடங்களுக்குச் செல்வதற்கு
வாரம் ஒரு பயண ஏற்பாடு

விபரங்களுக்கு:

NATIONAL
SHIPPING AND TRAVEL
New Lalitha Building,
185/2, Kasthuriar Road,
JAFFNA.

(C/2958)



A/L 90, 91 பிரிவு II

கலை, வர்த்தக, விஞ்ஞான
வகுப்புக்களுக்கான விண்ணப்பங்கள்
ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

கலை வர்த்தக பிரிவு:

| | |
|---|---|
| பொருளியல் — | சின்னத்தம்பி |
| கணக்கியல் — | மரியதாஸ் |
| வர்த்தகம் — | தேவா |
| புவியியல் — | வேலா |
| அளவையியல் — | S. S. மனோகரன் |
| இந்து நாகரிகம் — | அருள்நங்கை |
| தமிழ் — | குழந்தை |
| அரசியல் — | மஃறூப் |

விஞ்ஞான பிரிவு:

| | |
|---|---|
| பௌதிகவியல் — | சௌந்தி சத்தியசீலன் |
| இரசாயனவியல் — | செல்வா |
| தாவரவியல் — | பாலா |
| விலங்கியல் — | ஈசன் ஞானம் |
| தூய பிரயோக கணிதம் — | கிருஷ்ணு |

விபரங்களுக்கு:
நிர்வாகி
நிரு ரியூசன் சென்றர்
கோண்டாவில்:

(சி/3011)


பாடசாலை மதிய உணவுச் செலவு:

# மூன்று ரூபாவுக்கு மேற்பட்டால் மேலதிக பணம் கிடையாது

## யாழ். கல்வித் திணைக்கள அதிகாரி விளக்கம்

மானிப்பாய், ஜூலை 5

'பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவு தயாரித்து வழங்கும்போது ஒரு மாணவனுக்கு ஒருநாளுக்கான செலவு ரூபா மூன்றுக்கு மேற்படக்கூடாது. அதிபர்கள் ஒரு நாளுக்கு ஒரு மாணவனுக்கு மூன்று ரூபாவுக்கு மேல் செலவழித்திருந்தால் அம்மேலதிக பணம் கல்வித் திணைக்களத்தால் வழங்கப்படமாட்டாது.

பல அதிபர்களின் முறைப்பாடுகளுக்கு பதிலளித்த யாழ்ப்பாணம் கல்வித்திணைக்கள கணக்காளர் திரு. ஆர். சுகுணதீரன் மேற்கண்டவாறு கூறினார்.

மருதனமடம் கோட்டப் பாடசாலைகளின் அதிபர்கள் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவித்தாவது;

தாம் அனுப்பிய கணக்குக் கூற்று தவறானது என வெட்டப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டதாக சில அதிபர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒவ்வொருநாளும் ஒருமாணவனுக்காக செலவழிக்கப்பட்ட தொகை மூன்று ரூபாவாக காட்டப்பட்ட எந்தக் கணக்குக் கூற்றும் வெட்டப்பட மாட்டாது.

சில அதிபர்கள், ஒருநாள் மூன்று ரூபா நாற்பது சதம் ஒரு மாணவனுக்கான செலவு எனக் காட்டி, மறுநாள் இரண்டு ரூபா அறுபது சதம் எனக்காட்டி சராசரியாக மூன்று ரூபா என கணக்கு காட்டியுள்ளனர். இதுவும் தவறானதாகும்.

இதன்படி சரியான அளவுத் திட்டத்தின்படி கலோரிப் பெறுமானமுள்ள உணவு வழங்கப்பட்டிருக்கவில்லை.

எனவே அதிபர்கள் எதிர்காலத்தில் ஒரு மாணவனுக்கு ஒருநாளுக்கு ஏற்படும் செலவு மூன்று ரூபாவுக்குமேற்படாது பார்த்துக் கொள்ளவேண்டும்.

மூன்று ரூபாவுக்குள் உணவு தயாரிப்புச் செலவுகள், விறகு போன்றவற்றுக்கான செலவுகள் குறிக்கப்பட்டிருக்கலாம்.

எனவே சரியான முறையில் அதாவது சராசரி செலவாக மூன்று ரூபாவை காண்பிக்காமல் தினமும் ஒரு மாணவனுக்காகும் செலவு மூன்று ரூபாவாக இருக்கக்கூடியதாக செலவிட்டு கணக்கை அனுப்பினால் அச்செலவிற்கான பணத்தை சிரமமின்றி பெற்றுக் கொள்ள முடியும்;

இப்படி அவர் தெரிவித்தார். (க-90)

## ஐ. நா. சங்க சமாஜம்

வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் உள்ள ஐக்கிய நாணய சங்கங்கள், சிக்கன கடன் வழங்கும் சங்கங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய சமாஜம் மல்லாகம் கிராமஅபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. சுவாமிநாதன் ஸ்ரீ பாஸ்கரன் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

பிராந்திய கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. ஏ. சின்னத்தம்பி சங்கங்களைப் பதிவு செய்தல் பற்றிய அறிவுரைகளை வழங்கினார்.

பிரதேச சமாஜத்தின் தலைவராகத் திரு. சு. ஸ்ரீபாஸ்கரனும் செயலாளராகத் திரு. வை.குணானும் தெரிவு செய்யப்பட்டனர். (ச)

## கதிர்காம உற்சவ காலத்தில் உயிர்க்கொலைகளை நிறுத்துக

### இந்து இளைஞர் பேரவை கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 5

கதிர்காமக் கந்தன் ஆலய வருடாந்த உற்சவம் 3 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமானது.

இவ் உற்சவ காலத்தில் சைவப் பெரும் மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய சில விதிகளை யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவை சைவ மக்களின் கவனத்துக்கும் பின்பற்றலுக்கும் வெளியிட்டுள்ளது.

★ கதிர்காம உற்சவகாலமான 3 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை இறைச்சிக்காக உயிர் இனங்களைக் கொல்லும் நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும்.

★ இக்காலத்தில் கதிர்காம முருகன் பாடல்களை இலங்கையிலும் உலக மக்கள் மத்தியிலும் ஒலிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

★ இந்து சமயத் தெய்வங்களது ஆலயங்களிலும் இந்து மதத் தெய்வங்களை உள்ளடக்கிய பௌத்த மத வழிபாட்டுத் தலச் சூழல்களிலும் மாமிசத் தடைகளை ஏற்படுத்துவதுடன் அமைதி நிலவ பிரார்த்தனைகளை மேற்கொள்ளவேண்டும்.

இப்படி இந்து இளைஞர் பேரவையின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ச)

## நிவாரணம் கொடுபடவில்லை

வடமராட்சி, ஜூலை 5

இழுவையந்திரம், பிளாஸ்டிக் படகு, மீன்பிடிவலை போன்றவற்றுக்குகடற்றொழில் அமைச்சினால் வழங்கப்பட்டு வரும் வருடாந்த நிவாரணம் வடமராட்சி மீனவர்களுக்கு பல வருடங்களாகக் கிடைக்கவில்லை.

இது தொடர்பாக வடமராட்சி கடற்றொழில் அமைச்சின் உப காரியாலயம் பல தடவைகள் முறையீடு செய்தும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அறிய வருகின்றது. [க-160]

## விவசாய அடையாளக் கார்ட் பெறுமாறு வேண்டுகோள்

மானிப்பாய், ஜூலை 5

உடுவில் கமநல சேவை நிலையத்துக்கு உட்பட்ட விவசாயிகள் விவசாய அடையாளக் கார்ட்டுக்களைப்பெறத் தவறி இருந்தால் அவற்றை உடனடியாகப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

நெற்காணிகள், மேட்டு நிலக் காணிகளில் விவசாயம் செய்யும் விவசாயிகள் தமது நன்மைக்காக விவசாய அடையாள கார்ட்டைப் பெற்றுக் கொள்வது நல்லது.

இது வரை அடையாள கார்ட் பெருதவர்களும் புதுப்பித்துக் கொள்ள வேண்டியவர்களும் உடனடியாக தம்முடன் தொடர்பு கொண்டு வேண்டிய உதவிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு உடுவில் கமநலசேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் திரு. க. மகாதேவராசா வேண்டுகோள் விடுத்துள்ளார். (ச-90)

## மல கூடம்

யாழ்ப்பாணம், ஜூலை 5

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம் சர்வோதயத்துக்கு ஊடாக வலிகாமம் வடக்கு ஐக்கிய நாணய சங்கங்களின் சமாஜத்தைச் சேர்ந்த உறுப்புரிமைச் சங்கம் ஒவ்வொன்றுக்கும் பத்து மல கூடங்கள் கட்டுவதற்கு நிதிஉதவி வழங்க உள்ளது.

யூ. எஸ். நிதி உதவியுடன் நில மட்டத்திலான மலகூடங்களை அமைத்துக் கொடுக்க மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம் முன்வந்துள்ளது.

## மற்றும் சில பாடசாலைகளின் ஜி. சி. ஈ. முடிவுகள்

வடபகுதியைச் சேர்ந்த மற்றும் சில பாடசாலைகளின் ஜீ. சி.ஈ (சாதாரண) பரீட்சை முடிவுகள் வருமாறு:

★

பருத்தித்துறை - ஹாட்லிக் கல்லூரி: 6 பேர்- 6 அதிதிறமைச்சித்தி, 14 பேர்- 5 அதிதிறமைச்சித்தி, 17பேர்- 4அதிதிறமைச்சித்தி.

★

பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தர பெண்கள் கல்லூரி ஒருவர்- 6 அதிதிறமைச்சித்தி 9 பேர்- 5 அதிதிறமைச்சித்தி 12 பேர்- 4 அதிதிறமைச்சித்தி

★

பருத்தித்துறை வடஇந்து மகளிர் கல்லூரி: ஒருவர்- 5 அதிதிறமைச்சித்தி.

★

புற்றளை மகா வித்தியாலயம்- ஒருவர்- 4 அதிதிறமைச்சித்தி

★

சாவகச்சேரி இந்துக்கல்லூரி 6 பேர்- 5 அதிதிறமைச்சித்தி, 8 பேர்- 4 அதிதிறமைச்சித்தி.

★

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி- ஒருவர்- 5 அதிதிறமைச்சித்தி, ஒருவர்- 2 அதிதிறமைச்சித்தி.

★

சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஒருவர்: - 4அதிதிறமைச்சித்தி

★

வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி- ஒருவர்- 5அதிதிறமைச்சித்தி.

★

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி ஒருவர்- 6 அதிதிறமைச்சித்தி, 5 பேர்- 5 அதிதிறமைச்சித்தி.

★

பளை மகாவித்தியாலயம்- இருவர்- 5 அதிதிறமைச்சித்தி

★

நவாலி மகாவித்தியாலயம் ஒருவர்- 4 அதிதிறமைச்சித்தி

★

இணுவில் சைவப்பிரகாச மகாவித்தியாலயம், ஒருவர்- 6 அதிதிறமைச்சித்தி.

★

கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம் - ஒருவர்- 5 அதிதிறமைச்சித்தி.

★

கிளிநொச்சி இந்துமகாவித்தியாலயம் ஒருவர்- 5 அதிதிறமைச்சித்தி.

★

[illegible] அரசினர்

தமிழ்க் கலவன் பாடசாலை ஒருவர்- 5 அதிதிறமைச்சித்தி

★

வட்டக்கச்சி மகாவித்தியாலயம் ஒருவர்- 3 அதிதிறமைச்சித்தி.

★

காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி ஒருவர்- 5 அதிதிறமைச்சித்தி.

★

வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம் மூவர்- 5 அதிதிறமைச்சித்தி.

★

வவுனியா மகாவித்தியாலயம் இருவர்- 3 அதிதிறமைச்சித்தி

★

அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம் இருவர்- 4 அதிதிறமைச்சித்தி.

★

யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி ஒருவர் 6 அதிதிறமைச்சித்திஇருவர் 5 அதிதிறமைச்சித்தி.

★

வடடுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் இருமாணவர்கள் ஆறு பாடங்களில் அதி திறமைச் சித்தி. (இ)

## வேலைநிறுத்த விடயம்; அமைச்சர் குழு ஆராய்வு

கொழும்பு, ஜூலை 5

போக்குவரத்து ஊழியர் வேலைநிறுத்தம் பற்றி ஆராய்ந்த பத்து அமைச்சர்கள் கொண்ட குழு ஜனாதிபதி பிரேமதாசாவிடம் தனதுஅறிக்கையைச் சமர்ப்பித்தது.

போக்குவரத்து ஊழியருக்குச் சாதகமான பல சிபார்சுகளை இக் குழு செய்திருக்கிறது.

பிரதமர் டி. பி. விஜேதுங்க தலைமையிலான இக்குழு கடந்த புதன்கிழமையும் வியாழக்கிழமையும் கூடி ஆராய்ந்தது.

ஜனாதிபதி பிரேமதாசா சிபார்சுகள் மீதான இறுதி முடிவை எடுப்பார் என்று சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

25 தினங்களாக இவ்வேலை நிறுத்தம் நடைபெற்று வருகிறது. (உ-எ)

## தசாகாதி கிரயக்கு அழைப்பு

அன்புடையீர்!

சுக்கில வருடம் ஆனி மாதம் 14 ஆம் நாள் (28 - 6 - 89 ) புதன்கிழமையன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

**ஷப்த்தாப்த சிலர்**
**சிவஸ்ரீ நா. கணேசராஜக் குருக்கள்**
(புங்குடுதீவு சின்னத்துரை ஐயா)

அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெற உள்ளதால் உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

ஆனி 23 ஆம் நாள் (7 - 7 - 89) வெள்ளி – தசாகம்
ஆனி 24 ஆம் நாள் (8 - 7 - 89)சனி –ஏகோதிஷ்டம்
ஆனி 25 ஆம்நாள் (9 - 7 - 89)ஞாயிறு-சபிண்டீகரணம்
ஆனி 26 ஆம் நாள் (10 - 7 - 89) திங்கள் கிரயக்கும்

கந்தசாமி கோயில்,
நாரந்தனை, சரவணை.

இங்ஙனம்
மனைவி, மக்கள்,
மருமக்கள்.

(1125)


யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
இலங்கை

குளிரூட்டி இயந்திரம் பழுதுபார்ப்பதற்கான
கேள்விப்பத்திரம் கோரல்

யாழ் பல்கலைக்கழகத்தில் பொருத்தப்பட்டுள்ள மத்திய குளிரூட்டி இயந்திரம் பழுதுபார்ப்பதற்கு தகுதிவாய்ந்த பொறியியல் நிறுவனங்களிடமிருந்து பொறியிடப்பட்ட கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

மேற்படி இயந்திரத்தை [illegible] அலுவலக நாட்களில் யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீ[illegible]த்தில் அமைந்துள்ள கணனிபொறி அறையில் பா[illegible]வையிடலாம்.

பொறியிடப்பட்ட கூறுவிலைகள் நி[illegible]வாளர் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு 25 - 07 - 89 முற்பகல் 9 மணிக்கு முன்பாக தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கூறுவிலைகள் இடப்பட்ட தபால் உறையின் இடது பக்க மூலையில் UJ / RS / AIR / 01 / 89 என்ற இலக்கம் இடப்படல் வேண்டும்.

கூறுவிலைகள் 27-07-89 அன்று பகல் 10 மணிக்கு பல்கலைக்கழக சபை அறையில் திறக்கப்படும். அத்தருணம் விண்ணப்பதாரர்களோ அல்லது அவர்களால் அங்கீகரிக்கப்பட்டவர்களோ சமுகமளிக்கலாம்.

பதிவாளர்,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

[சி-3016]



GENERAL CLERICAL SERVICE

அதிசிறப்பு வகுப்பிற்கு (SUPRA CLASS)
நியமனம் வழங்குவதற்கான
போட்டிப் பரீட்சை

1989 செப்டம்பர் 16 ஆம் திகதி நடைபெறவிருக்கும் போட்டிப்பரீட்சைக்கான
2 மாத துரித பயிற்சி வகுப்புகள்
(பலதனித்துவம் வாய்ந்த விரிவுரையாளர்களின் இணைந்தசேவை)

ஆரம்பம் - 9 - 7 - 1989 காலை 9 மணி

பாடநெறி: 1. அலுவலகமுகாமை 2 அலுவலசமுறை 3. கணக்கீட்டுவேலை 4. தாபனவேலை,

★ அரசாங்க எழுதுநர் சேவையில் 8 வருடங்கள் கடமையாற்றியவர்களும் எழுதுநர் சேவையிலுள்ள பட்டதாரிகளும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 7 - 7 89

★ இலவச அச்சடித்த பாடக்குறிப்புகள்.
★ விரிவுரைகள் சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்.
★ கட்டணம் ரூபா 300. 00 (முழுப்பயிற்சிக்கும்)

விபரங்களுக்கு:-

ASTAN INSTITUTE
166/1, HOSPITAL ROAD - JAFFNA.
(A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம் 1 ஆம் மாடி)

(சி/3017)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் கொத்தணியில் ஆசிரியர்கள் பற்றுக்குறை

காரைநகர் ஜூலை 5

காரைநகர் கொத்தணிப் பிரிவில் அமைந்த பாடசாலைகளில் கல்வி கற்பிப்பதற்கு போதியளவு ஆசிரியர்கள் இல்லாததால் மாணவர்களின் கல்வி பெரிதும்பாதிக்கப்பட்டு வருவதாகப் பாடசாலை அதிபர்கள் தெரிவிக்கின்றனர்.

காரைநகர் கொத்தணியில் அமைந்துள்ள 12 பாடசாலைகளில் 52 ஆசிரியர்கள் இன்று தேவைப்படுகின்றனர் என்று பாடசாலைவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகாவித்தியாலயத்துக்கு எட்டு ஆசிரியர்களும், யாழ்ற்றன் பாடசாலைக்கு ஒன்பது ஆசிரியர்களும், சுந்தரமூர்த்தி பாடசாலைக்கு ஐந்து ஆசிரியர்களும், வியாவில்பாடசாலைக்கு ஐந்து ஆசிரியர்களும் தோப்புக்காடு வலந்தலை வடக்கு, வலந்தலை தெற்கு, ஆயிலி, மெய்கண்டான், ஊரி இலகடி, வேரப்பிட்டி பாடசாலைகளுக்கு மொத்தம் 23 ஆசிரியர்களும் தேவைப்படுகின்றனர் என்று கூறப்படுகின்றது.

பட்டதாரி ஆசிரியர்கள் 3 பேரும் ஆங்கில ஆசிரியர்கள் 7 பேரும் கணித விஞ்ஞானப் பாடங்களுக்குஒருவரும்ஆரம்ப கல்வி கற்பிப்பதற்கு25 பேரும் ஏனையவைகளுக்கு 13 பேரும் தேவைப்படுகின்றனர் என்று அதிபர்கள் தெரிவிக்கின்றனர். [ச-73]

# ஈழத்தில் புத்தகப் பண்பாட்டை ஜனரஞ்சகப்படுத்த உழைத்தவர்

## வரதரின் பிறந்தநாள் விழாவில் பாராட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 5

'ஈழத்து நவீன இலக்கியத்தின் சமூகக்கடப்பாடு பற்றி வரதர் எழுதியுள்ளார். அச்சுச்சாதனம் ஒன்றின் பொறுப்பாளன் என்ற வகையில் அவரது பணி இன்னும் முக்கியமானது. 'வரதர் பல குறிப்புக்கள்' தமிழில் முன் மாதிரியானது. புத்தகப் பண்பாட்டை ஜனரஞ்சகப்படுத்துவதில் வரதர், நந்தி ஆகியோர் நன்றாகப் பாடுபட்டிருக்கிறார்கள்.

இவ்வாறு எழுத்தாளர் தி. ச. வரதராசனின் (வரதர்) 65 வது பிறந்தநாள் விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் பேராசிரியர் கா. சிவத்தம்பி குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் சிவலிங்கப் புளியடியில் எழுத்தாளர்கள் நா. சோமகாந்தன் தம்பதிகளின் இல்லத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இவ்வைபவத்தில் எழுத்தாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

கருத்து வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமல் எல்லோருடனும் பழகும் இனிமையான பண்பு கொண்ட வரதருக்கு நாட்டுச்சூழல் நன்றாக இருந்தால் பல்வேறு எழுத்தாளர் சங்கங்களும் அமைப்புக்களும் விழாக் கொண்டாடியிருக்கும் என்று பேராசிரியர் சிவத்தம்பி கூறினார்.

திரு. சொக்கன் பேசுகையில்; மறுமலர்ச்சி, தேன்மொழி போன்ற பத்திரிகைகளை நடத்தி இளம் எழுத்தாளர்களை ஊக்குவித்தவர் வரதர். தற்போது மாதம் ஒரு நாவல் திட்டத்தை முன்வைத்துள்ளார். செங்கை ஆழியானின் 24 மணித்தியாலங்கள் என்ற நூலைப் பிரசுரித்து மூன்றாவது பதிப்பையும் வெளியிட்டு வேகமாக விற்பனை செய்து பிரசுரத்துறையில் சாதனையை நிலைநாட்டினார் என்றார்.

'மல்லிகை' ஆசிரியர் திரு: டொமினிக் ஜீவா பேசுகையில் கூறியதாவது;

எமது பல பழைய எழுத்தாளர்கள் இன்னும் 'மாஜிகளாகவே' இருக்கும் போது உறங்காமல் எழுதிக் கொண்டிருப்பவர் வரதர். முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளைத் தலைவராக இருந்தார்.

### தமிழகத்தில் இலங்கை நூல்கள்

இலங்கையில் வெளியாகும் நூல் ஒவ்வொன்றினதும் 400 பிரதிகளைத் தமிழ் நாட்டில் வாங்கும் வாய்ப்பு உண்டு. ஆனால் அவர்களது எழுத்து அமைப்புக்கேற்ப நாமும் எழுத்துச் சீர்திருத்தம் செய்து நூல்களை வெளியிட வேண்டும். சகோதர எழுத்தாளர்களை நேசித்துப் பாராட்டும் பண்பு எமது மண்ணிற்கு உண்டு என்றார்.

கலைப்பேரரசு திரு. ஏ. ரி. பொன்னுத்துரை பேசுகையில் 'முரண்பாடு இருக்கலாம், பகை இருக்கக்கூடாது என்று வாழ்பவர் வரதர். எளிமையாகக் 'கப்படா' இல்லாமல் வாழ்பவர் இவர்' என்றார்.

கோகிலா மகேந்திரன் பேசுகையில், பலனை எதிர்பாராமல் அன்பு செலுத்தும் பண்பு வரதரிடம் உண்டு. அதுவே அவரது வெற்றியின் ரகசியம் என்றார். தெணியான் பேசுகையில், வரதரின் எல்லாக் கதைகளுமே நல்லவை என்றார்.

நெல்லை க. பேரன் பேசுகையில், 'வரதர் தமது பிரசுர முயற்சியால் எமது எழுத்தாளர்களின் படைப்புக்களை வெளிக்கொணர வேண்டும். தமிழ்நாட்டைப் போன்று இங்கும் உடனடியாக 400 பிரதிகளையாவது வாங்க அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும்' என்றார்.

கவிஞர் சோ. பத்மநாதன், செம்பியன் செல்வன், செங்கை ஆழியான், கவிஞர் இ. முருகையன், உதயன் - சஞ்சீவி ஆசிரியர் திரு. ம. வ. கானமயில்நாதன், கலாநிதி சி. மௌனகுரு, நீர்வை பொன்னையன், 'ஈழநாடு, சார்பாக திரு. மாணிக்கம், ஐ. சாந்தன், கம்பன் கழகச் செயலாளர் இ. ஜெயராஜ் ஆகியோரும் வரதரின் சிறப்புகளைக் கூறி வாழ்த்திப் பேசினார்கள்.

இலக்கிய அன்பர்கள் சார்பாக பரிசுகளை திருமதி பத்மா சோமகாந்தன், திரு. பூ. ஸ்ரீதர்சிங் ஆகியோர் வழங்கினார்கள். திரு. தி. ச. வரதராஜன் பதிலுரையின்போது அனைவருக்கும் நன்றி கூறினார். (அ)

## புதிய தலைவர்

சுழிபுரம், ஜூலை 5

சுழிபுரம்பறளை ஸ்ரீசிவசுப்பிரமணியசுவாமி கோவில் பரிபாலன சபைத் தலைவராக திரு. சி. அப்புத்துரை தெரிவு செய்யப்பட்டார். இவர் சுழிபுரம் கம்பளை அம்பாள் ஆலய பரிபாலன சபைத் தலைவருமாவார். (சு-28)

## மது ஒழிப்புப் பிரசாரம்

யாழ்ப்பாணம், ஜூலை 5

வட பிரதேச நல்லொழுக்க இயக்க சம்மேளனம் கிளைச் சங்கங்கள் ஊடாக கிராமங்கள் தோறும் மது விலக்கு பிரசாரம் நடத்தி வருகிறது.

அவர்கள் ''அடிக்'' நிறுவனம் வழங்கும் நிதி உதவியுடன் கிராம மட்டங்களில் கருத்தரங்குகள், சொற்பொழிவுகள், கவிதை, நாடகம், வில்லுப்பாட்டு போன்ற கலை நிகழ்ச்சிகளை நடத்தி போதைவஸ்து, மது ஒழிப்பு பிரசாரங்களையும் நடத்தி வருகின்றனர். (ச)

---


## 1 ஆவது ஆண்டு நினைவு தினம்



அமரர்

**தம்பு செல்வரத்தினம்**

(ஆயுள் வேத வைத்தியர்)

தோற்றம்: 15- 07- 1928 — மறைவு: 15- 07- 1988


திதி: 05 - 07 - 1989

ஐயா அன்று
எமை நீங்கள் வளமாக வளர்த்திடவே
பாரினிலே பட்ட துயர் கொஞ்சமல்ல!
கண்ணொளியில் நாம் கண்ட
காவியங்கள் எத்தனையோ?
அத்தனையும் இன்று வரை
அசை போடு தெம் மனமே!
எம் வாழ்வு எம் உயர்வு
என்பதையே எண்ணிநீர்
கண்ட கனவெல்லாம்
நனவாகி வரும்வேளை
காலனவன் பிரித்துவிட்டான்
காவலன் எமக்கில்லை
உம் நினைவே துணையாக
உம்மையே எண்ணி நாம்
வாழ்கின்றோம் வாழ்த்தி
வணங்கி நிற்கின்றோம்;

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

70/5, கடற்கரை வீதி,
நாவாந்துறை. (1136)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**வடிவேலு ஸ்ரீ மோகன்**

(மோகன் பிறதர்ஸ் உரிமையாளர்)

அன்னையின் மடியில் 16-09-1958 — ஆண்டவன் அடியில் 05-07-1984

பாசத்தின் சிகரமாய் பண்பின் உறைவிடமாய் எங்கள் எல்லோருக்கும் வழிகாட்டியாக இருந்த எங்கள் அன்பு தெய்வமே; நீங்கள் மறைந்து இன்றுடன் 5 ஆண்டுகள் சென்றாலும், நீங்கள் எங்கள் இதயங்களில் என்றும் வாழ்கிறீர்கள். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, மாமா,
அம்மம்மா, தம்பிமார்,
தங்கைமார்.

210, முத்தமிழ் வீதி,
யாழ்ப்பாணம். (11443)

## 31 ஆவது நாள் நினைவஞ்சலி





**திருமதி பத்மாவதி முத்துக்குமாரு** (பவளம்)

மலர்வு: 07 — 11 — 1957 உதிர்வு: 27 — 05 — 1989

**நல்லதம்பி தர்மராசா** (குஞ்சு)

மலர்வு: 19 — 01 — 1970 உதிர்வு: 05 — 06 — 1989


ஜேர்மனி மண்ணிலே மறைந்தாயோ? பவளம்
பொன்னுடலைக் காணவில்லையே!
இங்கிருந்த உன் தம்பி குஞ்சுவையும்
உன் துணைக்கு அழைத்துச் சென்றாயோ?
எங்களை விட்டு உன் அன்பு அக்காவுடன்
நீயும் ஓடிச் சென்றாயோ? — குஞ்சு
அன்புச் செல்வங்களே! எங்கு சென்றீர்கள்?

உங்கள் ஆத்மா சாந்தியடைய எந்நாளும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்;

உங்கள் பிரிவால் துயருறும்;
கணவர்
அப்பா, அம்மா,
சகோதரர்கள், சகோதரிகள், அத்தான்மார்,
மச்சான்மார், மச்சாள்மார், உற்றார், உறவினர்கள்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம். [சி-2740]

## 2 ஆம் ஆண்டு இதய அஞ்சலி



**வசந்தன் (மில்லர்)**

துன்னாலை

தாயின் மடியில்: 01- 01- 1966 — மண்ணின் மடியில்: 05 - 07- 1987

மரணத்தை நாம் மகிழ்ச்சியுடன் தழுவிக் கொள்கின்றோம். இதனால் எம் மக்கள் விடுதலை அடைவார்கள் என்பதனால்.

-மில்லர்

நண்பர்கள்.
(துன்னாலை.)

(11425)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வன்

**J. அருள் ஷைலேந்திரா**

அன்னையின் மடியில்: 06-01-1981 — ஆண்டவன் அடியில்: 05-06-1989

தந்தையினால் உயிர் கொடுத்திட்ட ஜீவன்
தாயினால் கருவிலிருந்து உற்பவித்த ஜீவன்
பார்க்குமிட மெங்கும் நீக்கமற நின்று
பார்ப்பவர்கள் மகிழ்ந்திடவே சிரித்து நின்று
பால்வடியும் வதனத்தைக் காட்டி நின்ற — உன்னை
அவசரமாய் ஆண்டவன் ஏனய்யா அழைத்தான்?
தொப்புள் அறுகையிலே
உன் தொடர்பும் அறுந்திருந்தால்
கணநேர கலக்கத்தில் கவலையை மறந்திருப்போம்!
நல்லபேர் நாம் சூட்டி தாலாட்டி பிரிவதற்கா
உன்னை வளர்த்தோம்?

கண்ணீர் குளத்தில் எம்மை வீழ்த்தி காலன் உன்னைக் கொண்டு சென்று மாதம் ஒன்று மறைந்தது ஐயா! அரவணைத்த தாயும் தந்தையும், பாசம் கொண்ட அருமை அக்கா, தம்பியையும் அன்பு மிக்க உற்றார் உறவினரையும் தவிக்க விட்டுத் தனியாகப் பிரிந்து போக எப்படியய்யா மனம் வந்தது? உன் பால்வடியும் அழகு முகத்தை நினைக்கும்போது உச்சி வெடித்து உடல கருகுதைய்யா; அன்பு மகனே! ஆசை ஷைலே! உன்னைத் தினம் நினைந்து தவியாய்த் தவித்துத் துடிக்கும்.

உன் அன்பு அப்பா, அம்மா, பாசமிகு அக்கா, அருமைத் தம்பி, அப்பப்பா, அப்பம்மா, மாமாமார், மாமிமார், சித்தப்பாமார் (கனடா) கலிஸ்ரா சிஸ்ரர் அன்ரி, எவறஸ்ரா சிஸ்ரர் அன்ரி, பெரியம்மா, மச்சான்மார், மச்சாள்மார்.

அயித்தாம்புலம், கரம்பொன்,
ஊர்காவற்றுறை. (11440)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**
கடன்என்ப நல்லவை எல்லாம் கடன் அறிந்து
சான்ருண்மை மேற்கொள் பவர்க்கு.

**பொருள்:**
கடமை இவை என்று அறிந்து சான்ருண்மை மேற்கொண்டு நடப்பவர்க்கு நல்லவை எல்லாம் இயல்பான கடமை என்று கூறுவர்.

உதயன்

இல. 298/3, நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம்; 23078
05 - 07 - 1989 02 பெ; இல. 88

## தீவகம் போய்வர....

நெடுந்தீவுக் கடற்போக்குவரத்துக்கென புதிய இயந்திரப் படகுகளை விரைவில் சேவைக்கு விடுவதற்குப் போக்குவரத்துத் துணை அமைச்சர் உறுதி அளித்திருப்பதாகத் தகவல் வெளியாகி இருக்கிறது.

அந்த உறுதி வெறும் வாய்ச் சொல்லாகவோ அல்லது காகிதத்தில் இட்ட மையாகவோ மட்டும் இருந்து விடாமல், செயல் வடிவில் நடைபோட்டு, தீவுப்பகுதி மக்களின் போக்குவரத்துக் கஷ்டங்களைப் போக்கடிக்க வேண்டும். இதுவே எமது பெருவிருப்பமாகும்.

சப்த தீவுகள் என அழைக்கப்படும் புங்குடுதீவு, அனலைதீவு, எழுவைதீவு, நயினாதீவு, நெடுந்தீவு உட்பட்ட தீவுகள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்தும் பிரிந்து கடலுக்குள் இருப்பவை. ஆயினும் அவை பல வகைகளாலும் பண்பாட்டுச் சிறப்பும், வரலாற்றுச் சிறப்பும் உடையவை. ஒன்றுக்கு என்றன்றி ஒவ்வொன்றுமே தமிழரின் கலாசார, சமூக, சமயச்சிறப்புகளுடன் கூடிய மகத்துவம் மிக்கது.

அந்தச் சிறப்புகளையும், மகத்துவங்களையும் பேணும் விதத்தில் அத்தீவுகள் ஈன்றெடுத்த பலரும் தமிழர் வரலாற்றில் மட்டுமன்றி, இந்த நாட்டின சரித்திரத்திலேயே புகழ்பூத்த பிரசைகளாக மிளிர்ந்தார்கள்; மிளிர்கிருர்கள். இலங்கையின் மூலை முடுக்கெல்லாம் தீவுப்பகுதி மக்கள் பிரபல்யமானவர்களாகவும், பெயர்பெற்றவர்களாகவும், புகழ் சேர்த்தவர்கள் பலதுறைகளிலும் அவர்களின் பங்களிப்புக் கலந்துள்ளது.

பாரம்பரியம், வரலாறு, சிறப்பு, மகத்துவம்' பெருமை என்ற பலவுக்கும் மத்தியில் தீவுப்பகுதி வாழ் மக்கள் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினைகள் கடற்போக்குவரத்தும், குடிதண்ணீர் பற்ருக்குறையும் ஆகும்.

அவற்றிலும் கடற்போக்குவரதது என்பது சிரமங்களும், கஷ்டங்களும், தொல்லைகளும் நிறைந்த ஒன்ருகி விட்டது.

நிலம், நீர், ஆகாயம் ஆகிய மூன்றையும் விளுடிக்கணக்கில் விஞ்சுவேகத்தில் கடந்துவிட வகை செயயும் சாதனங்கள் மலிந்துவிட்ட காலத்தில், தீவுப்பகுதிக்கான கடற்போக்கு பல நூற்ருண்டுகள் பின்தள்ளப்பட்ட பரிதாப நிலையில் உளளது.

தீவுப்பகுதிகளின் பிரதான நிலப்பகுதியான ஊர்காவற்றுறைக்கோ அல்லது புங்குடுதீவுத் துறைக்கோ வந்து போவது என்பது ஒரு பெரும்பயணம் என்று கருதுமளவுக்குத் தீவகங்களில் வாழும் மக்களின் கடற்போக்குவரத்து மாறிவிட்டது.

அரசாங்க சார்பில் சேவையில் ஈடுபடுத்தப்படுவவதற்காக இரண்டு மோட்டார் படகுகள் மட்டுமே உள்ளன. ஏனையவை தனியாருக்குச் சொந்தமான சிறு படகுகள். அரசாங்கப் படகுகளின் நாளாந்தச்சேவைகள் இப்போது வெகுவாகக் குறைந்து விட்டன. தனியார் படகுகளில், பயணத்துக்குப் போதிய வசதிகள் குறைவு.

திறந்த கடலில் கடும் வெயிலிலும், பெருங் காற்றிலும் வயதானவர்கள், சிறு குழந்தைகள் உட்பட அச்ச உணர்வுடன், நிச்சயமற்ற பயணங்களை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் நிலவுகிறது. அவசரத்துக்குப் போய் வருவதற்கு அதிக கட்டணம் இறைக்க வேண்டிய நிலை. இன்னும் எத்தனையோ இடர்கள்...!

இது விடயத்தில் அரசாங்கம், அதாவது பொறுப்பான திணைக்களத்தின் அதிகாரிகள் அக்கறை காட்டி தீவுப்பகுதி மக்களுக்கு உதவ வேண்டும்; நவீன விசைப் படகுகளைத் தருவிப்பதற்கு முயற்சி செய்து உயர்பீடத்திற்கு இடித்துரைக்க வேண்டும்;

இயலாவிட்டால், கூட்டுறவு அடிப்படையில் மக்களை படகுச் சேவைகளை நடத்த வேண்டிய நிதி மற்றும் உபகரண உதவிகளைச் செய்து கொடுக்க வேண்டும்.

தீவக மக்களின் பிரயாணப் பிரச்சினையை தொடர விடக்கூடாது. தீவகத்தைப் பின்தங்க வைக்காமல், ஏனைய பகுதிகளுடன் சேர்த்து வளர்ச்சி அடையச் செய்து முன்னேற்றுவதற்கு, முதலில் அவசியமானது வசதியான, விரைவான கடற்போக்குவரத்துச் சேவை என்பதை எவரும் மறந்துவிடக் கூடாது.

தீவகத்திற்குப் போய் வருவது சிரமமில்லா, நேரம் விழுங்காப் பயணமாக மாறுவது எப்போது...? சம்பந்தப்பட்டவர்களின் மனப்பூர்வமான கரிசனை கால் கோளிடுவது எப்போது...?

## காபூலைச் சுற்றிவளைத்துவரும் ஆப்கன் கெரில்லாக்கள்

ஆப்கனிஸ்தான் தலைநகர் காபூல்மீது தாக்குதல் ஒன்றை நடத்த கெரில்லாக்கள் திரட்டப்படுவதாகக் காபூல் அரசு நேற்று அறிவித்தது.

இதனிடையில்- கெரில்லாக்கள் நேற்று காபூல்மீது நடத்திய ரொக்கெட் தாக்குதலில் 8 பேர் இறந்தனர்.

கெரில்லாக்களின் தாக்குதலை முறியடிக்க அரசுப்படைகள் உஷார்ப்படுத்தப்பட்டுள்ளன என்றும் காபூல் வானெலி அறிவித்தது. (எ)

## அ. தி. மு.க. தொண்டர் ஆர்ப்பாட்டம்

மதுரை, ஜூலை 04

பாண்டியன் போக்குவரத்துக் கழகத்துக்குச் சொந்தமான பஸ் ஒன்றை அ. தி. மு. க. தொண்டர்கள் நேற்றுக் கொளுத்தினர்,

அ. தி. மு. க. தலைவர்களில் ஒருவரான முன்னுள் அமைச்சர் கே. கே. எஸ். ஆர். இராமச்சந்திரனை பொலீஸார் கைது செய்து காவலில் வைத்ததை ஆட்சேபித்து இவ்வன்செயல் மேற்கொள்ளப்பட்டது.

முதலமைச்சர் கருணுநிதியின் விஜயத்தை முன்னிட்டு இவர் கைது செய்யப்பட்டார். (எ)

ஜூலை மாதம் நடுப்பகுதியில்

# சியாச்சென் எல்லைப்புற உடன்பாடு
# ராஜீவ் - பெனுஸிர் கைச்சாத்திடுவர்

இஸ்லாமபாத், ஜூலை 4

சியாச்சென் பனிப்பிரதேசத் தகராறுக்கு தீர்வுகாணு வதில் இந்தியாவும் பாகிஸ்தானும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

சியாச்சென் சம்பந்தமாக உடன்பாடு ஒன்றில் இம் மாதம் நடுப்பகுதியில் இரு நாடுகளும் கைச்சாத்திடவுள்ளன.

பிரதமர் ராஜீவ் காந்தி இம் மாத நடுப்பகுதியில் இஸ்லாமபாத்துக்கு ஒரு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு செல்லவுள்ளார்.

அப்போது இந்த உடன்பாட்டில் பிரதமர் காந்தியும் பிரதமர் பெனுஸிரும் கைச்சாத்திடுவர் என்று பாகிஸ்தான் துணை பாதுகாப்பு அமைச்சர் குலாம் சர்வார்சீமா செய்தியளரிடம் தெரிவித்தார்.

உடன்பாடு காணப்படவுள்ள இத்தருணத்தில் சியாச்சென் பிரதேசத் தகராறு பற்றி கருத்து வெளியிடுவதை தவிர்க்கும்படி பத்திரிகைகளை துணை அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

**நிராகரிப்பு**

இதேவேளை தெற்காசியாவை அணுவாயுதங்கள் அற்ற பிராந்தியமாக்கவேண்டும் என்ற பாகிஸ்தானின் யோசனையை இந்திய அரசு நிராகரித்து விட்டது. (எ)

## ஆப்கன் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர அரபாத் முயற்சி

வாஷிங்டன், ஜூலை 4

ஆப்கனிஸ்தான் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் தனிப்பட்ட ரீதியில் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத் செயல்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டது.

'வாஷிங்டன் போஸ்ட்' பத்திரிகை இத்தகவலை வெளியிட்டது.

அரபாத்தின் அந்தரங்க ஆலோசகருங்காபூலில்அவரது பிரதிநிதியுமாக உள்ள ஜுனுப் அபுகாலித்தை ஆதாரங் காட்டி இப்பத்திரிகை இச் செய்தியை வெளியிட்டது.

எதிர்கால அரசு ஒன்றைத் தெரிவு செய்வதற்கு சுதந்திரமான தேர்தல் ஒன்றை நடத்த ஐ நா; அணிசேரா இயக்கம், இஸ்லாமிய நாடுகள் அமைப்பு ஆகியன உறுதி தரும் பட்சத்தில் நஜிபுல்லா அரசுடன் பேச்சுக்கள் நடத்துவதற்கு கிளர்ச்சிக்காரர்கள் தயாராக இருப்பதாக ஜுனுப்காலித் நம்பிக்கை தெரிவித்திருக்கிருர். (எ)

## நமீபியாவில் தேர்தல்

வின்ட்டுஹொக், ஜூலை 4

நமீபியாவில் தேர்தல் பிரசாரம் கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகியது.

சுவப்போ இயக்கம் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டது. (எ)

## போலந்து ஜனுதிபதித் தேர்தல் வலேசா போட்டியிடார்!

போலந்து ஜனுதிபதித் தேர்தலில் சொலிடாரிட்டி தொழிற்சங்கத் தலைவர் லெச் வலேசா போட்டியிடமாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

போலந்து நாடாளுமன்ற சொலிடாரிட்டி எம்பிக்கள் கூடி இந்த முடிவை எடுத்தனர்.

போலந்தில் இன்னும் ஜனநாயக முறை உருவாகவில்லை.

இந்த நிலையில் திரு. வலேசா ஜனுதிபதியாகி சாதிக்கப்போவது ஒன்றுமே இல்லை. என்று சொலிடாரிட்டி எம்பி திரு. ஜேனஸ் ஒனிஸ்கிவிச் சொன்னுர்.(எ)

## அமெரிக்காவில் கல்வி பயிலும் சீனத் தலைவரின் புதல்வன்

பிலாடெல்பியா, ஜூலை 5

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய செயலாளரான ஜியாங் செமினின் புதல்வர் ஜியாங்மியான் அமெரிக்காவில் டிரெச்ஸல் பல்கலைக்கழகத்தில் படித்து வருகிருர் என்று அறிவிக்கப்படுகிறது.

மாணவரின் ஜனநாயக கிளர்ச்சியை சீன ராணுவ பலத்தை கொண்டு அடக்கிய போது அமெரிக்காவில் சீன மாணவர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

அப்போது ஜியாங்கின் மகன் பல்கலைக்கழகத்தில் அமைதியாக படித்துக்கொண்டிருந்தார்.

ஜியாங் கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலாளராகப் பதவி ஏற்றதைத் தொடர்ந்து ஜியாங் மியான் பிரபலமானுர். (எ)

## கண் சிகிச்சை நிபுணருக்கு 'மனிதாபிமான விருது'

நியூயார்க், ஜூலை 4

கண் சத்திர சிகிச்சையில் உலக சாதனை புரிந்து கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்ற இந்திய டாக்டர் எம். சி. மோடி என்பவருக்கு அமெரிக்காவில் சர்வதேச லயன் சழகம் 'மனிதாபிமான விருது' வழங்கிக் கெளரவித்தது.

மியாமியில் நடந்த இந்த வைபவத்தில் 20 ஆயிரம் லயன் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

75 லட்சம் ரூபா பணமும் அன்பளிப்பாக அவருக்கு வழங்கப்பட்டது.

பணத்தை பெங்களூரில் தான் அமைத்துள்ள தர்ம ஸ்தாபனத்துக்கு கொடுக்கப் போவதாக அவர் அறிவித்தார்.

விழிப்புலன், செவிப்புலன் அற்றவர்களின் புனர்வாழ்வுக்கு இந்த நிதி பயன்படுத்தப்படும்.

ஐந்து லட்சம் பேருக்கு கண் சத்திர சிகிச்சை செய்து சாதனை புரிந்ததற்காக இவரது பெயர் கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது.

பிரதமர் கூட்டும்

## முதலமைச்சர்கள் மாநாட்டை எதிர்க்கட்சிகள் பகிஷ்கரிக்கும்

பிரதமர் ராஜீவ் காந்தி வருகிற ஏழாம் திகதி புதுடெல்லியில் நடத்தும் முதலமைச்சர்கள் மாநாட்டை பகிஷ்கரிக்கப்போவதாக எதிர்க்கட்சிகள் அறிவித்திருக்கின்றன.

இதற்கிணங்க தமிழ்நாடு, ஆந்திரா, அஸாம். மேற்கு வங்காளம், கேரளா ஆகிய மாநிலங்களின் முதலமைச்சர்கள் இம்மாநாட்டில் கலந்து கொள்ளமாட்டார்கள்;

உள்ளூராட்சி அமைப்புச் சட்டத்தைத் திருத்தி அமைப்பதுசம்பந்தமாக ஆராயவே பிரதமர் இந்த மாநாட்டைக் கூட்டுகிருர். (எ)

## 700பதவிகள் - 700 சம்பளம் பெற்ற பரகுவே அமைச்சர்

அஸன்சியன் ஜூலை 4

ஒருவர் ஒரே சமயத்தில் 700 பதவிகளை வகித்து 700 சம்பளங்களைப் பெற்ற அதிசயம் பரகுவே நாட்டில் நடந்துள்ளது;

பதவி கவிழ்க்கப்பட்ட ஜனுதிபதி ஜெனரல் அல்பிரடோ ஸ்ரோஸ்ஸனர் நிர்வாகத்தில் சுகாதார அமைச்சராக பதவி வகித்த திரு. கோடே கிமெனெஸ் என்பவரே இந்த அதிசயத்தை புரிந்திருக்கிருர்;

இந்த விதமாக திரு. கிமென்ஸ் ஆயிரம் கோடி டாலர் அரசுப் பணத்தைக் களவாடியதாக பரகுவே அரசு குற்றஞ்சாட்டி அவர் மீது விசாரணை நடத்தி வருகிறது.

இத்தொகை பரகுவே நாட்டின் வெளிநாட்டுக் கடனைப் போல ஐந்து மடங்கு என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இவ்வளவு பணத்தையும் எப்படித் திருப்பிப் பொறுவது என்பது தான் பரகுவேயின் புதிய அரசுக்குப் பிரச்சனையாக உள்ளது;

முன்னுள் ஜனுதிபதி ஸ்ரோஸ்ஸனர் கூட நாட்டில் வசூலிக்கப்பட்ட வீதி வரிகளில் 3 சதவிதத்தைத் தனது சொந்த வங்கிக் கணக்கில் போட்டு வந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது. (எ)

### சமய சந்நிதிகளில்

## கந்தசுவாமி திருக்கோயில் கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூலை 5

கைதடி மேற்கு இனுங்கித்தோட்டம் கந்தசாமி கோயில் மகா கும்பாபிஷேகம் 5 ஆம் திகதி புதன்கிழமை பகல் 12 மணிக்கு நடைபெறும்.

நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள், கலாநிதி கே. கைலாசநாதக்குருக்கள் ஆகியோர் ஆசியுரைவழங்குவார்கள்.

துர்க்கா துரந்தரி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி செஞ் சொற்மணி வசந்தா வைத்தியநாதன் ஆகியோரின் சிறப்புரைகளும் இடம் பெறும். (ச)

## காரைநகர் சித்தி விநாயகர் கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 5

காரைநகர் துறைமுகம் மாணுக்கைச் சித்திரகூடச் சித்திவிநாயகர்ஆலயமஹோற்சவம் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தேர்த்திருவிழா 8ஆம் திகதி சனிக்கிழமை 12 மணிக்கும் தீர்த்தத் திருவிழா மறுநாள் ஞாயிற்றுக்கிழமை வியாவில் ஐயனுர் கோயிலில் காலை 9 மணிக்கும் நடைபெறவுள்ளன. (ச)

## அரசடிக்காடு கந்தசுவாமிகோயில் உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூலை 5

காரைநகர் - அரசடிக்காடு உபய கதிர்காமம் அருள்மிகு கதிர்வேலாயுதசுவாமிகோயில் வருடாந்த மகோற்சவம் இன்று புதன்கிழமை (5-7 89) கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து 18 நாட்கள் திருவிழா நடைபெறும். (ச)

# படையினரால் தடுத்து வைக்கப்பட்ட படகுகளை மீளப்பெறுவதில் இழுபறி
## பணத்தைச் செலுத்திவிட்டு உரிமையாளர்கள் அலைகின்றனர்

யாழ்ப்பாணம் ஜூலை 5

கடத்தல் நடவடிக்கை தொடர்பாக வடயகுதிக் கடலில் கடந்த காலங்களில் கைப்பற்றப்பட்ட 30க்கும் மேற்பட்ட படகுகளை உரிமையாளர்களிடம் திருப்பி ஒப்படைப்பதில் இழுபறி இருந்து வருகிறது.

இப்படகுகள் தற்போது காரைநகர் கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

இந்தப் படகுகளை சலுகை அடிப்படை ஒன்றில் உரியவர்களிடம் ஒப்படைக்க இலங்கை அரசும், சுங்கத் திணைக்களமும் ஒப்புக் கொண்டிருந்தன.

படகு ஒன்றுக்கு ரூபா 10 ஆயிரத்தை பிணைப்பணமாகச் செலுத்தி விட்டுப் படகுகளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தது.

இதன்படி சுமார் 20 பேர் வரை யாழ். சுங்கத்திணைக்களத்தில் பிணைப்பணத்தைச் செலுத்திப் பற்றுச் சீட்டுகளை பெற்றுக் கொண்டு காரைநகர் கடற்படை முகாமிற்குச் சென்று படகுகளைத் தரும்படி கேட்டனராம். ஆனுல் படகுகளைத் தரமுடியாது என பதில் அளிக்கப்பட்டதாம்;

இதனை அடுத்து படகு உரிமையாளர்கள் கடந்த பல மாதங்களாக காரைநகர் கடற்படை முகாமிற்கும் யாழ் சுங்கத் திணைக்களத்துக்கும் அலைந்து வருகின்றனர்

இதேபோல அகதிகளை ஏற்றிச் சென்றதன் பேரில் கைப்பற்றப்பட்ட100க்குமேற்பட்ட படகுகளும் காரைநகர் கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. (இ-9)

**சங்கானை**

## ஸ்ரீ மனேன்மணி அம்பாள் மஹா கும்பாபிஷேகம்
### கிரியைகள் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 5

சங்கானை கூடத்து ஸ்ரீ மனேன்மணி அம்பாள் தேவஸ்தான புனராவர்த்தன, நவ குண்டபக்ஷ மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 9.08 மணி முதல் 10.24 மணி வரையில் நடைபெற இருக்கிறது.

கும்பாபிஷேகக் கிரியைகள் இன்று காலை ஆரம்பமாகி தொடர்ந்து ஐந்து நாட்கள் நடைபெற இருக்கின்றன.

இந்த ஆலயம் பல இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு புது மெருகுடன் விளங்குகிறது.

சிவஸ்ரீ சிவ நித்தியானந்தக் குருக்கள் தலைமையில் பல குருமார்கள் கிரியைகளை நடத்தி வைப்பார்கள்.

கும்பாபிஷேக விழாவன்று விசேஷ மேளக் கச்சேரியும், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, பேராசிரியர் கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள் ஆகியோரின் ஆசியுரையும் இடம்பெற உள்ளன; (இ-3)

## கொக்குவில் துர்க்கா உற்சவம்

யாழ்ப்பாணம் ஜூலை 5

கொக்குவில் ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலய அலங்கார உற்சவங்கள் 5ஆம் திகதிபுதன் கிழமை தொடக்கம் 10 தினங்களாக 14ஆம் திகதி வரை விசேட அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெறவுள்ளன.

5ஆம் திகதி புதன்கிழமை காலை 7 மணிக்கு சங்காபிஷேகமும் மாலை 4, 30 மணிக்கு விசேட பூசையும் அம்பாள் வீதி வலம் வருதலும் நடைபெறும்.

15ஆம் திகதி சனிக்கிழமை காலை 11 மணிக்கு விசேட பூசையும் பகல் 12 மணிக்கு அன்னதானமும்நடைபெறும். (ச)

## வண்ணுங்குளம் பகுதியில் மீன்வாடி, வீடுகள் தீக்கிரை

முல்லைத்தீவு, ஜூலை 5

முல்லைத்தீவு வண்ணுங்குளம் பகுதியில் கடந்த முதலாம் திகதி அமுல் செய்யப்பட்ட ஊரடங்கு வேளையில் மீன் வாடிகள், வீடுகள், கோயில் ஆகியன தீக்கிரையாகின என்று தெரியவந்துள்ளது;

இச் சம்பவத்தில் வண்ணுங்குளத்தை சேர்ந்த அ. யேசுராசா, ஊ; ஜெகநாதன் ஆகியோரின் மீன் வாடிகளும், து. சிவநேசன், பி. யோசேப், சி. ஸ்ரீகாந்தன், க. சின்னையா சி. சிவநேசன் ஆகியோரின் வீடுகளும், க. கந்தசாமியின் கடையும். வண்ணுங்குளம் கி. மு. சங்கத்தினரால் ஸ்தாபிக்கப்பட்ட பிள்ளையார் ஆலயமும் சேதமாக்கப்பட்டன என்று தெரிய வந்தது. (இ-92)

## ஹஜ் சிந்தனைகள்

உலகிலே முதன் முதல் நிர்மாணிக்கப்பட்ட முதல் வணக்கஸ்தலம் மக்காவில் அமைந்திருக்கும் அல்லாஹ்வின் இல்லமான கஃபா ஆகும். அதனை எவர் தரிசிக்கச் சென்று வருகிருரோ அவர் தன் பாவங்களை விட்டும் தூய்மையானவராயும், இறைவனின் சுவர்க்கத்தில் பிரவேசிக்கத் தகுதியுடையவராயும் திரும்பி வருகின்ருர்.

மனிதன் செய்த அத்தனை பாவங்களும் ஹஜ் செய்வதன் மூலம் அழிக்கப்பட்டு அன்று பிறந்த குழந்தை போன்று வருவதாயின் இக்கடமை எவ்வளவு மகத்துவமிக்கதாகும்.

தவறு சய்வதும் மன்னிப்புத்தேடுவதும் மனிதனின் இயல்பான செயல். எனவே தவறு செய்வோர் ஹஜ் செய்யக் கூடாதென்றல்ல. ஆனுல் ஹஜ்ஜை நிறைவு செய்தோர் மேலும் தவறில், பாவத்தில் ஈடுபடுவதே கூடாததாகும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது

**ஆர்த்தி ஜுவல்லர்ஸ்**

★ தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
நெக்கட்டிவ் [Processing] செய்தல் இலவசம்
★ விற்பனை வர்ண நிழற்படச் சுருள்கள்
**Kodak Fuji Konic.**
**Tudor Fort B/W**

பெற்றுக்கொள்ள நாடுங்கள்.



# உதயன்

05 - 07 - 1989 புதன்கிழமை



எம்மிடம் வர்ண நிழற்படப் பிரதிகள்
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள்
போட்டோ அல்பங்கள் இலவசம்
மேலதிக விபரங்களுக்கு

**ஆர்த்தி ஜுவல்லர்ஸ்**
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


# எந்த ஒரு நாடும் எங்களுக்கு புத்தி கூற வேண்டியதில்லை

## ஜனாதிபதி மீண்டும் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 5
இலங்கை சுதந்திர நாடு-எனவே நாம் எவருடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும்; என்ன அடிப்படையில் பேசவேண்டும் என்பதை எந்த ஒரு நபரும் எமக்குப் புத்திகூற வேண்டியதில்லை. —இவ்வாறு ஜனாதிபதி திரு: ஆர். பிரேமதாஸ மீண்டும் வலியுறுத்தி இருக்கிறார்;

மகியங்கனை கம்உதாவ விழாவில் இறுதிநாள் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு ஜனாதிபதி பேசியபோதே அவர் இதனைச் சொன்னார்.

அப்போது அவர் சொன்னதாவது:-

வரும் ஆறு ஆண்டுகளில்பல குறிக்கோள்களை நிறைவேற்ற அரசு திட்டமிட்டுள்ளது.

நாட்டில் அமைதியை ஏற்படுத்துவது, ஒழுங்கை நிலைநாட்டுவது ஆகியவை இவற்றில் அடங்கும்.

ஆயுதங்களினாலோ, பயமுறுத்தலாலே, வன்செயல்களினாலோ அமைதியை ஏற்படுத்த நாம் எண்ணவில்லை

பேச்சுவார்த்தைகள் கருத்து உடன்பாடு சமரசமுயற்சிஆகியனமூலம் இவற்றை அடைய அரசு விரும்புகின்றது.

இத்தகைய எண்ணங்களை ஏற்றுக்கொள்ள மறுக்கும் சில சக்திகள் இருக்கலாம்.

ஆனால் நாம் உற்சாகம் இழக்கக்கூடாது. எம்மாலான முயற்சிகளை நாம் செய்ய வேண்டும்.

வன்செயல்களினால் அமைதி உருவாக முடியாது.

நாம் சமாதானம் பற்றி ஒரு புறம் பேச்சுகள் நடத்த, இன்னொரு புறம் ஆயுதம் மூலம் இதைச் சாதிக்கலாம் என்று சிறு குழுக்கள் முயற்சிக்கின்றன.

கொடூரமான கொலைகள் நடைபெறுகின்றன. நாடு முழுவதிலும் பீதியை அவர்கள் ஏற்படுத்தி வருகின்றனர்.

### ஸ்தம்பித நிலை

இன்று பொதுச் சேவைகள் ஸ்தம்பித்து விட்டன.

நியாயமான கோரிக்கைகளுக்காக வேலைநிறுத்தம் மேற்கொள்ளப் படவில்லை. ஆயுத பத்தாலும் கொலை பயமுறுத்தலாலும் இன்று பொதுச்சேவைகள் சீர்குலைக்கப்பட்டுள்ளன.

அநீதி இழைக்கப்பட்டதால் தாம் வேலைக்குச் செல்லாமல் இருக்கவில்லை என்றும் மரண அச்சுறுத்தலே இதற்குக் காரணம்என்றும் ஊழியர்கள் அறிவித்து உள்ளனர்.

ஏனைய துறைகளில் உள்ள ஊழியர்களுக்கும் இப்பயமுறுத்தல் விடுக்கப்படலாம்.

இவ்விதமாக சகல சேவைகளும் சீர்குலைந்தால் நாடு என்னவாகும்;

உணவுப் பொருள்களுடன் கப்பல்கள் கொழும்புத்துறைமுகத்துக்கு வந்தவண்ணம் உள்ளன. ஆனுல் அவற்றை இறக்குவதற்கு முடியாமல் உள்ளது. வேலை செய்பவர்கள் வேலைத் தலத்திற்குச் செல்லவிட்டால் சம்பளத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது. ஓய்வூதியக் காரர்கள் ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொள்ளமுடியாது:

### வேறு நாடு புத்தி கூற வேண்டியது இல்லை

இதுகாலவரை நாம் ஒருவரோடு ஒருவர் மோதிக்கொண்டோம்;

பேச்சுக்கள் மூலப் அமைதியை நிலைநாட்ட் முடியும்.

எமது நாடு இறைமையும் சுதந்திரமும் கொண்ட ஒரு நாடு.

எனவே எவருடனும் நாம் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்றோ எத்தகையநிபந்தனைகளை அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும் என்பது பற்றியோ எந்த ஒரு நாடோ, அரசாங்கமோ எமக்குப் புத்திகூறவேண்டிய அவசியமில்லை;

நாட்டின் இறைமை மக்களிடம் இருக்கிறது: தனிப்பட்டவர்களின் விருப்புவெறுப்புகளுக்காக மக்களின் நலத்தைப் பாழாக்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஒருபோதும் முன்வரமாட்டாது, —இப்படி ஜனாதிபதி தெரிவித்தார்.

[எ]

## தினசரி 250 தொன் மா யாழ் வருகின்றது

யாழ்ப்பாணம், ஜூலை5
திருமலை பிரிமா ஆலையில் இருந்து கடந்த 20ஆம் திகதி முதல் தினமும் 250 மெட்ரிக் தொன் மா யாழ்ப்பாணத்துக்கு லொறிகள் மூலம் எடுத்து வரப்படுகிறது;

யாழ். மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் லொறிகள்மூலமே மா எடுத்து வரப்படுகிறது.

போதிய அளவு மா தற்போது கையிருப்பில் இருப்பதால் தட்டுப்பாடு ஏற்பட இடமில்லை என்று உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

(உ-3)

## தொடர்ந்து பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 5
யாழ். பல்கலைக்கழக கலைப் பீட மாணவன் மொழுசிலை விடுதலைசெய்யக்கோரி கலைப் பீட மாணவர்கள் இரண்டாவது நாளாக நேற்றும் விரிவுரைகளைப் பகிஷ்கரித்தனர்.

(உ-3)

## சர்வஜன வாக்கெடுப்பு

கொழும்பு, ஜூலை 5
1990 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதி வடக்கு —கிழக்கு மாகாண இணைப்புத் தொடர்பான சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுவதை ஜனாதிபதி திரு: ஆர்' பிரேமதாஸா நேற்று வெளியிட்ட பத்திரிகைக் குறிப்பு மூலம் உறுதிப்படுத்தி உள்ளார்.

(இ)


எமது நேற்றைய புதிய வெளியீடு

கார்த்திக், - சோபனா, நிழல்கள் ரவி
நடித்த

**சட்டத்தின் திறப்புவிழா**
(ஒறிஜினல்)

**வீடியோ விமல்**
117, மானிப்பாய்வீதி -- ஐந்து சந்தி (மேல்மாடி)
யாழ்ப்பாணம்,

11448


## தசாக அழைப்பிதழ்

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய பிரதம குருக்கள் ஜெயந்திநாதக் குருக்களின் அன்பு மருமகனும், தர்மலிங்கக் குருக்களின் புதல்வனும் ஆகிய குகனேஸ்வர சர்மா (கண்ணன்) வின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், இசைக் கலைஞர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது ஆத்ம சாந்திக்கிரியைகளிலும் கலந்துகொண்டு பிரார்த்திக்குமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

07-07-1989 (ஆனி மீ 23) வெள்ளி,
தசாகம் (காலை 9-00 மணி)
08-07-1989 (ஆனி மீ 24) சனி,
ஏகோதிஷ்டம் - மாசியம் (10-00 மணி)
09-07-1989 (ஆனி மீ 25) ஞாயிறு,
நாராயண பலி, சபிண்டீகரணம்
நவக்கிர ஹோமம் சமாராதனை

(தனிப்பட்ட அழைப்புகள் அனுப்ப முடியாமைக்கு வருந்துகின்றோம்.)

இங்ஙனம்,
(குடும்பத்தினர்)

தாவடி,
கொக்குவில்.

(1150)

## கண்ணீர் அஞ்சலியும் நன்றி நவிலலும்

### திரு. வேலுப்பிள்ளை கந்தையா

சுதுமலை, மானிப்பாய்.

கடந்த 28 - 06 - 89 புதன்கிழமை அன்று எம்மை விட்டுப் பிரிந்து எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திய எனது அன்பு மாமனாரின் பிரிவால் அவர் காட்டிய அன்பிலும் பாசத்திலுமிருந்து விடுபடமுடியாமல் தினம் தினம் துடித்துக் கொண்டிருக்கும் நான்; என்னை இருள் சூழ்ந்த துன்ப மேகங்கள் சூழ்ந்திருந்த வேளையில் அவர் என்னையும் எனது குடும்பத்தையும் தன் கண்ணெனக் காத்ததை நினைத்து உருகி உருகி எனது கண்ணீரால் அன்னாருக்கு எனது அஞ்சலியைத் தெரிவிப்பதோடு அன்னாரின் மறைவு கேட்டு ஓடோடி வந்து உதவிய உற்றார், உறவினர் நண்பர்களுக்கு நன்றி தெரிவித்தும் அவரின் மறைவு கேட்டு வாளாவிருந்த நெருங்கிய உறவினரின் செயல்களுக்கும் அன்னாரின் பெயரில் நன்றி தெரிவித்தும், அன்னாரின் ஆத்மா இறைபதம் சேர பிரார்த்தித்துக் கொள்ளும்.

அன்பு மருமகன்
அ, க. கணபதி

ஜெகபதிகாமன்ஸ்,
மானிப்பாய்.

[சி 2741]

### 300க்கும்--.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
ரொலியே மனநோயாளர் தப்பியோடிய சம்பவமாகும்;

போக்குவரத்து ஊழியர்களின் வேலைநிறுத்தத்துக்கு ஆதரவு தெரிவித்து நேற்று கொழும்பு மாவட்ட ஆஸ்பத்திரிகளில் கடமைபுரியும் ஊழியர்கள் ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம் செய்தனர். அதனால் கொழும்பு மாவட்டத்தில் ஆஸ்பத்திரிகள் இயங்காமல் ஸ்தம்பித்தன. (அ-1)

### கிளிநொச்சி--

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
மடைந்தனர்.

பாடசாலைக்கு வந்திருந்த —மாணவன் சூரியகுமாரின் தாய் —பெரியண்ணன் உமையாளும் இந்தச் சம்பவத்தில் காயமடைந்தார்.

காயமடைந்தவர்கள் உடனடியாக கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். அவர்களில் பெரியண்ணன் சூரியகுமார் (வயது 5) என்ற மாணவன் மட்டும் அங்கிருந்து உடனடியாக யாழ்: ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டார்;

நேற்று பாடசாலை ஷெல் தாக்குதலுக்கு இலக்கான சமயம், பாடசாலைக்குச் சமுகம் கொடுத்திருந்த மாணவர் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருந்தது. இதனால் பெரும் உயிர், உடற் சேதங்கள் தவிர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இரணைமடுச்சந்தி முகாமிலிருந்தே ஷெல்கள் ஏவிவிடப்பட்டதாகவும் —

கரடிப்போக்குச் சந்தியிலிருந்து மூன்றும் வாய்க்கால் வீதியில் சுமார் பத்து ஷெல்கள் விழுந்து வெடித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

(உ-10)

## மட்டக்களப்பிலும் பாடசாலைகள் இயங்கவில்லை

மட்டக்களப்பு, ஜூலை 5
மட்டக்களப்பு பகுதி பாடசாலைகள் நேற்று இயங்கவில்லை மாணவர்கள் வகுப்புகளுக்கு சமுகம் தராததே இதற்குக் காரணமாகும். ஆசிரியர்கள் கடமைக்கு வந்திருந்தனர்.

(ஒ-21)

## சுட்டுக்கொலை

மட்டக்களப்பு, ஜூலை 5
மட்டக்களப்பு, சதாம் ஹுசேன் மாதிரிக் கிராமத்தில் கடந்த திங்கள் இரவு முஸ்லிம் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

(ஒ-21)

### நீர்கொழும்பு--

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
டங்களும் பொலீஸாரால் கரைசேர்க்கப்பட்டன: அவற்றிங் பெண்களின் சடலங்களும் அடங்கும். (அ-1)

## ராஜீவுக்கு இரண்டாவது--

(1ஆம் பக்கத்தொடர்ச்சி)
வது கடிதத்தை திரு. பிரேமதாஸா திங்களன்று பிரதமர் காந்திக்கு அனுப்பிவைத்தார்;

இந்த இரண்டாவது கடிதம் கொழும்பில் இருந்து புதுடில்லிக்கு விசேட இராஜதந்திர பையில் (Special diplomatic bag) அனுப்பப்பட்டது.

### மீண்டும் வலியுறுத்து

ஜூலை 29 க்கு முன்னர் அமைதிப்படை முழுமையாக வாபஸ் பெறவேண்டும்; அல்லது முகாமுக்குத் திரும்ப வேண்டும் என்பதை திரு. பிரேமதாஸா மீண்டும் இக் கடிதத்தில் வலியுறுத்தி இருப்பதாக புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு பயனளிக்கக் கூடிய முறையில் அதிகாரங்கள் வழங்கப்படவில்லை என்ற இந்தியாவின் நிலைப்பாட்டை திரு. பிரேமதாஸ தனது கடிதத்தில் மறுதலித்திருக்கிறார்.

இலங்கை ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் வந்த அமைதிப்படை அவர் சொன்னவுடன் திரும்பிப் போவது தானே என்ற தனது நிலைப்பாட்டை திரு பிரேமதாஸா கடிதத்தில் மீண்டும் வலியுறுத்தி இருக்கிறார்.

அமைதிப்படை விலகல் இருதரப்பினருக்கும் இடையேயான பேச்சுக்களின் அடிப்படையில் இடம்பெற வேண்டும் என்ற இந்தியாவின் நிலை குறித்து, திரு. பிரேமதாஸா தனது கடிதத்தில் 'ஆம்' அல்லது 'இல்லை' என்று எதுவுமே தெரிவிக்கவில்லை.

அமைதிப்படை வாபஸுக்கு கால அட்டவணை ஒன்று நிர்ணயிக்க ஆலோசனை நடத்தப்பட வேண்டும் என்பது குறித்து திரு. பிரேமதாஸாவின் கடிதத்தில் ஒன்றுமே கூறப்பட்டிருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது;

### ராஜீவின் கருத்து

இதேவேளை பிரேமதாஸா கடைசியாக அனுப்பிய கடிதம் முந்திய கடிதத்தைவிட ஆக்கபூர்வமானதாக இருப்பதாக இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி நேற்றுத் தெரிவித்தார்.

திங்கள் இரவு கிடைத்த இக் கடிதம் பரிசீலனை செய்யப்பட்டு வருவதாகவும் அதன் பின்னரே பதில் அனுப்பப்படும் என்றும் பிரதமர் காந்தி மேலும் தெரிவித்தார்.

அமைதிப்படையை விலக்கிக்கொள்வதற்கான கால அட்டவணையைத் தயாரிப்பது பற்றி இலங்கையுடன் பேச்சு நடத்த இந்தியா தயாராக இருப்பதாகவும் பிரதமர் காந்தி தெரிவித்தார்.

இந்திய — இலங்கை உடன்பாடு, அமைதிப்படை விலகல் ஆகியன குறித்து தனது மன நிலையை மாற்றிக்கொள்ளும் நிலையில் ஜனாதிபதி பிரேமதாஸா இல்லை என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்ததாக 'இந்து' எழுதியிருக்கிறது.

இதனிடையில் மோசமடைந்துவரும் இரு நாடுகளின் உறவைச் சீராக்கச் சில பகுதிகளில் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

ஜூலை முடிவுக்குள் அமைதிப்படையினரை முற்றாக விலக்கிக்கொள்ளும்படி தான் விடுத்த வேண்டுகோளை நிராகரித்ததன்மூலம் இந்திய அரசு, தனது அதிகாரத்தைக் குறைத்து மதிப்பிட்டுவிட்டதாக திரு. பிரேமதாஸா உணர்கிறார் என்றும் இந்து எழுதியிருக்கிறது.

(உ-எ)

## வவுனியா நகரப்பகுதி வழமைக்கு திரும்பியது

வவுனியா, ஜூலை 5
வவுனியாவில் கடந்த சனியன்று பிறப்பிக்கப்பட்ட ஒருநாள் ஊரடங்குச் சட்டம், வழமையான ஞாயிற்றுக்கிழமை கடையடைப்பு, மற்றும் விடுமுறை ஆகியவற்றின் பின்னர் திங்களன்று வவுனியா நகரம் வழமைக்குத் திரும்பியது.

நகர வீதிகளில் பெரும் எண்ணிக்கையில் காணப்பட்ட பொது மக்கள், தமக்குத் தேவையான பாவனைப் பொருள்களை வாங்கிச் செல்வதில் தீவிர கவனமும், அவசரமும் காட்டியதைக் காண முடிந்தது.

இதனிடையில் வவுனியாப் பகுதிகளில் ஞாயிறு, திங்கட்கிழமைகளில் பெரும் எண்ணிக்கையான இளைஞர்கள் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர். இவர்களில் சிலர் பின்னர் விடுதலை செய்யப்பட்டார்கள்.

(உ-164)

## இருநூறு தபால் பொதிகள் யாழ்ப்பாணம் வந்தன

யாழ்ப்பாணம், ஜூலை 5
இருநூறுக்கும் மேற்பட்ட தபால் பொதிகள் நேற்று யாழ் தபாற்கந்தோருக்கு வந்துசேர்ந்தன.

ஏற்கனவே வவுனியாவுக்கு வந்து அங்கு தேங்கிக்கிடந்த இந்தப் பொதிகள் நேற்று முன்தினம் பஸ்மூலம் யாழ்ப்பாணம் எடுத்துவர ஏற்பாடு செய்யப்பட்டது.

நேற்று முன்தினம் புளியங்குளத்தில் இடம்பெற்ற அசம்பாவிதம் காரணமாக இந்த பஸ்யாழ்ப்பாணம்வராமல்வவுனியாவுக்கு திரும்பியது. பின்னர் நேற்று அனைத்து பொதிகளும் பஸ் மூலம் யாழ்ப்பாணத்துக்கு கொண்டுவரப்பட்டன.

(உ-10)

## ஓட்டோவின் கட்டணம் உயர்வு

கொழும்பு, ஜூலை 5
கொழும்பு, ஓட்டோரிக்ஷோவின் கட்டணம் உயர்ந்துவிட்டது. ஒரு ஓட்டோவில் ஐவர் ஏற்றப்படுகிறார்கள்.

புறக்கோட்டையில் இருந்து பம்பலப்பிட்டிக்கு ஒருவரிடம் 15 ரூபா அறவிடப்படுகிறது: அதாவது ஐவருக்கும் 75 ரூபா அறவிடப்படுகிறது.

அதேபோல் வெள்ளவத்தைக்கு ஆளுக்கு 20 ரூபாவும், தெஹிவளைக்கு 25ரூபாவும் கட்டணம் அறவிடப்படுகிறது.

(ஓ-21)

## கொழும்பில் எரிபொருளுக்கு நீண்ட 'கியூ'

கொழும்பு, ஜூலை 5
கொழும்பில் நேற்று எரிபொருளுக்கு பெருந்தட்டுப்பாடு நிலவியது. நகரில் ஒரு சில எரிபொருள் விற்பனை நிலையங்களே திறந்திருந்தன.

அந்த விற்பனை நிலையங்களுக்கு முன்னால் நீண்ட வரிசையில் வாகனங்கள் காத்துக் கிடந்தன.

(ஓ-10-3)

## மாற்றம்

புதுடில்லி, ஜூலை 5
இந்தியாவில் ஹரிஜன சமூகத்தவர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் 5 பிரதி அமைச்சர்கள் இணை அமைச்சர்களாகி பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

1984ஆம் ஆண்டு பிரதமர் ராஜீவ்காந்தி பிரதமராகப் பதவி ஏற்றபின்னர் மேற்கொண்ட 27வது அமைச்சரவை மாற்றம் இதுவாகும்:

[இ]

### அடையாள---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
அடையாளக் கார்ட்களும் துப்பாக்கி ஒன்றும் இராணுவச் சீருடைகள் சிலவும் அவர்களிடமிருந்து பொலீஸாரால் கைப்பற்றப்பட்டன.

(உ-எ)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி எமிலி ஏர்னஸ்ரைன் துரைசிங்கம்

சாவகச்சேரி கச்சாய் வீதியைச் சேர்ந்த திருமதி எமிலி ஏர்னஸ்ரைன் துரைசிங்கம் 4-7-1989 அன்று காலமானார். அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்;

தகவல்:
திருமதி S. செல்வராஜா

கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

(11445)

### மாட்டின் செல்லையா

பண்டத்தரிப்பு சென். அன்ரனீஸ் வீதியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு. மாட்டின் செல்லையா அவர்கள் 04-07-1989 இல் காலமானார்.

இவர் றெஜினாவின் அன்புக் கணவரும், வசந்தா (ஆசிரியை நவாலிM.V.), தர்மராஜ் செல்லையா (கணக்கு பதிவாளர், M.P.C.S., அளவெட்டி), றெஜினோல்ட் பாலா செல்லையா (கணக்காளர், ஈஸ்வரன் பிறதர்ஸ், கொழும்பு), பற்றிக் ஜெயராஜ் செல்லையா (Works Supervisor, நீர்ப் பாசனத் திணைக்களம், வவுனியா), சாந்திலா (ஜேர்மனி), நிர்மலா ஆகியோரின் தந்தையும், மனோகரதாஸன் (ஆசிரியர், நவாலி M. V.), இந்திரா சுலோசனா (ஆசிரியை, திருக் குடும்ப கன்னியர் மடம், கொழும்பு), அன்ரன் (ஜேர்மனி), ஸ்ரனிஸ்லோஸ் ஆகியோரின் மாமனாரும், சிந்துஜா, சஞ்ஜே, ஷைனி, ரெரன்ஸ், குயீன்ரஸ், ரானிக்கா, வேக்மன், நிரோஷன், டானியா, ஸ்ரமிளா, அலன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்கம் பண்டத்தரிப்பு சென். மேரிஸ் சேமக்காலையில் 06-07-1989 வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெறும்:

தகவல்:
தர்மராஜ் செல்லையா

சென்ர் அன்ரனீஸ் வீதி,
பண்டத்தரிப்பு:

(T/7452)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 293/3 இல் உள்ள அச்சகத்தில் 05-07-1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.